# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2037 ஐப்பசி 30 வியாழக்கிழமை (16.11.2006) UTHAYAN A Lively National Tamil Daily கதிர்:350




மாமனிதர் ரவிராஜ் கல்வி பயின்ற டிறிபேக் கல்லூரிக் கொடி போர்த்தப்பட்டிருக்கிறது. மாணவிகள் கல்லூரிக் கீதம் இசைக்கின்றனர்.



பாடையில் வைக்கப்பட்டு அமரரின் பூதவுடல் மயானம் நோக்கி எடுத்துச் செல்லப்பட்டபோது திரள் திரளாகச் செல்லும் மக்கள் கூட்டம்.



மயானத்தில் இறுதிக்கிரியைகளை நடத்தும் மகனும்சகோதரரும்

## ஆயிரக்கணக்கானோர் கண்ணீர் மல்க

# ரவிராஜின் உடல் தீயுடன் சங்கமம்



அமரரின் பூதவுடல் தீயுடன் சங்கமமாகிறது

படங்கள்: உதயன் செய்தியாளர்கள்

## துயரமும் ஆத்திரமும் மேலிட மக்கள் இறுதி யாத்திரையில் திரண்டு பங்கேற்பு

தென்மராட்சி, நவம்பர் 16

பல்லாயிரக்கணக்கான மக்கள் கதறி கண்ணீர் மல்க மாமனிதர் நடராஜா ரவிராஜின் உடல் நேற்று நண்பகல் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்தில் அக்கினியுடன் சங்கமித்தது.

அரசியல் பிரமுகர்கள், கல்விச் சமூகத்தினர், அரச அதிகாரிகள், மாணவர்கள், ஆசிரியர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், மதப்பெரியோர்கள் என ஆயிரக்கணக்கானோர் திரண்டு நிற்க, ரவிராஜின் சிதைக்கு அவரது புதல்வர் உதிஸ்ரன் தீமூட்டினார்.

(10ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு-கிழக்கில் கடையடைப்பு! துக்கம்!!

கொழும்பு, நவ.16

மாமனிதர் நடராஜா ரவிராஜின் இறுதிச் சடங்கு நடைபெற்றதை ஒட்டி நேற்று வடக்கு - கிழக்குப் பிரதேசங்களில் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. மறைந்த தலைவருக்கு மரியாதை செலுத்தும்

(10ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டமைப்பின் எம்.பிக்கள் நேற்று கொழும்பு திரும்ப முடியவில்லை

யாழ்ப்பாணம், நவ.16

மாமனிதர் நடராஜா ரவிராஜின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொள்ள வந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்று கொழும்பு திரும்ப முடியவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம், வன்னி, திருகோணமலை மாவட்டங்களைப் பிரதிநிதித்துவப் படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எட்டுப் பேர் ரவிராஜின் இறுதிக்கிரியைகளில் பங்குபற்ற யாழ்ப்பாணம் வந்திருந்தனர். அவர்களுடன் தெற்கு ஊடகவியலாளர்கள் மற்றும் ரவிராஜின் உறவினர்களும் வந்

(10ஆம் பக்கம் பார்க்க)

## வரவு-செலவுத் திட்டத்தை இன்று ஜனாதிபதி சமர்ப்பிக்கின்றார்

கொழும்பு, நவ.16

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அரசின் இரண்டாவது வரவு - செலவுத்திட்டம் இன்று மாலை 4 மணிக்கு நிதி அமைச்சர் என்றவகையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் சமர்ப்பிக்கப்படும்.

2007ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் பத்து ஆண்டுகளுக்கான திட்டங்களை உள்ளடக்கியதாகவிருக்குமென பிரதி

(10ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கில் இரு தரப்பினரும் தொடர்ந்தும் ஷெல் வீச்சு!

ஏறாவூர், நவ.16

மட்டக்களப்பு மாவட்டத்தின் மாங்கேணி மற்றும் கஜுவத்தை இராணுவ முகாம்கள் மீது நேற்று முன்தினம் இரவு புலிகள் தொடர்ச்சியான எறிகணைத் தாக்குதல்களை மேற்கொண்டனர் என்று படையினர் தெரி விக்கின்றனர்.

இந்தத் தாக்குதல்களினால் படையினருக்கு எவ்வித பாதிப்புகளும் ஏற்படவில்லை

(10ஆம் பக்கம் பார்க்க)

## சக்தி ரி.வியின் 'மின்னல்' தொகுப்பாளர் ஸ்ரீரங்காவுக்கு கொலை அச்சுறுத்தலாம்

### கொழும்பு பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் தகவல்

கொழும்பு, நவ.16

சக்தி ரி.வியின் பணிப்பாளரும், 'மின்னல்', 'எரிமலை' நிகழ்ச்சிகளின் தொகுப்பாளருமாகிய ஜே.ஸ்ரீரங்காவுக்கு கொலை அச்சுறுத்தல் ஏற்பட்டிருப்பதாக கொழும்பு பிராந்தியத்துக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர் தெரிவித்தார் என்று 'சக்தி' ரி.வி. மற்றும் வானொலி ஆகியன நேற்று செய்தி வெளியிட்டன.

(10ஆம் பக்கம் பார்க்க)

## நாடுமுழுவதும் நேற்றிரவு மின்தடை

தலைநகர் கொழும்பு உட்பட நாட்டின் பல பகுதிகளில் நேற்றிரவு 7.45 மணி முதல் மின்சாரத் தடை ஏற்பட்டது. கொத்மலையில் இருந்து பியகம வரையிலான அதிசக்தி வாய்ந்த மின் இணைப்பின் மீது மின்னல் தாக்கியதனாலேயே இந்த மின் தடை ஏற்பட்டுள்ளதாகக் கூறப்பட்டது. ஆயினும், இதனை உறுதிப்படுத்த முடியவில்லை. எனினும், சில பகுதிகளில் நேற்றிரவு 9.30 மணிமுதல் மின்சார விநியோகம் வழமைக் குத் திரும்பியது. (த-12)

## அலரிமாளிகை அருகே குப்பைக்குள் கைக்குண்டு

ஜனாதிபதியின் வசிப்பிடமான அலரி மாளிகையின் பின்புறமாக உள்ள றொக்கின் தோட்ட வீதியில் நேற்றுக் காலை கைக்குண்டொன்று மீட்கப்பட்டது.

குறிப்பிட்ட வீதியிலுள்ள குப்பைகளுக்கு நடுவில் இந்தக் கண்டு நேற்றுக் காலை 7 மணியளவில் கண்டுபிடிக்கப் பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர். அதன்பின்னர் விசேட அதிரப்படையினர் உடனடியாக வரவழைக்கப்பட்டு குண்டு செயலிழக்கச் செய்யப்பட்டது. (ஐ)

## அடுத்த இரு ஆண்டுகளில் தீர்வு இன்றேல் இனி என்றைக்குமே தீர்வு இல்லை!

### வடக்கு, கிழக்கு பிரச்சினை குறித்து ரணில் கருத்து

கொழும்பு, நவ. 16

ஐ.தே.கட்சிக்கும் சுதந்திரக் கட்சிக்குமிடையில் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் மூலமோ அல்லது அடுத்த இரண்டு வருட காலத்தினுள்ளோ வடக்கு, கிழக்கு பிரச்சினைக்கு நிரந்தர தீர்வை காணமுடியாவிட்டால் ஜனநாயக நாடாளுமன்ற முறை மூலம் ஒருபோதும் தீர்வைக் காண முடியாதென எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

ஐ.தே.க. - ஸ்ரீல.சு.க. புரிந்துணர்வு ஒப்பந்தம் தொடர்பாக விளக்கமளிக்கும் கூட்டம் நேற்று முன்தினம் கம்பஹா வித்யா சேகர பிரிவெனயில் நடைபெற்றுள்ளது. இங்கு ரணில் விக்கிரமசிங்க தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

(10ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# ஜனாதிபதி மஹிந்த இந்தியா வருமுன்னர் ஏ-9 நெடுஞ்சாலையைத் திறக்கவும்!

சென்னை, நவ.16

இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உத்தியோகபூர்வ பயணமொன்றை மேற்கொண்டு இந்தியா வருகை தரும் முன்பாக இலங்கை நிலப்பரப்பையும் யாழ்ப்பாண தீபகற்பத்தையும் இணைக்கும் ஏ-9 நெடுஞ்சாலையைத் திறந்துவிடுமாறு இலங்கை அரசை இந்தியா நிர்ப்பந்திக்க வேண்டும் என்று பா.ம.க. நிறுவுனர் டாக்டர் ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து பிரதமர் மன்மோகன் சிங்குக்கு ராமதாஸ் அவசர கடிதமொன்றையும் வரைந்துள்ளார் அதில் அவர் -

இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ எதிர்வரும் 26ஆம் திகதி இந்தியா வருகை தரவுள்ளார் எனச் செய்திகள் வெளியாகியுள்ளன.

இந்நிலையில் பசி, பட்டினியால் வாடும் ஈழத்தமிழர்களுக்கு உணவு உள்ளிட்ட அத்தியாவசியப் பொருள்களைக் கொண்டுசெல்ல யாழ்ப்பாணத்தையும் இலங்கையின் பிரதான நிலப்பரப்பையும் இணைக்கும் 'ஏ-9' நெடுஞ்சாலையைத் திறந்துவிடுமாறு அந்நாட்டிடம் இந்தியா வலியுறுத்தவேண்டும். அது தொடர்பில் வாக்குறுதியை இலங்கை ஜனாதிபதியிடமிருந்து இந்தியா பெறவேண்டும்.

இலங்கை ஜனாதிபதி இந்தியா வருவதற்கு முன்பாகவே இந்த நெடுஞ்சாலை திறக்கப்படுவதை உறுதிசெய்யவேண்டும். அதற்கு இலங்கை அரசை இந்தியா நிர்ப்பந்திக்க வேண்டும்.

சர்வதேச அளவில் தமக்குள்ள நிலைமையின் தீவிரத்தை உணர்ந்து ஈழத்தமிழர் பிரச்சினை குறித்து பேச்சு நடத்த வெளியுறவுச் செயலர் சிவ் சங்கர் மேனனுக்குப் பதிலாக வெளியுறவுத்துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜியை அனுப்ப வேண்டும். இது பாட்டாளி மக்கள் கட்சியின் எதிர்பார்ப்பு மட்டுமல்ல தமிழ்நாட்டு மக்களின் எதிர்பார்ப்பும் கூட எனச் சுட்டிக்காட்டியுள்ளார்.

## வாசிப்பு மாத போட்டிகள் சரசாலையில் ஞாயிறன்று

தென்மராட்சி, நவ.16

தேசிய வாசிப்பு மாதத்தையொட்டி சரசாலை பொது நூல் நிலையத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்ட மாணவர்களுக்கிடையிலான போட்டிகள் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு மட்டுவில் கமலாசனி வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளன.

கதைகூறல், பேச்சு, பாட்டு, வாசிப்பு, கவிதை, கட்டுரை ஆகிய போட்டிகள் நடத்தப்படவுள்ளன. இப்போட்டிகளில் பங்குபற்றும் மாணவர்கள் போட்டிகள் ஆரம்பமாவதற்கு முன்னர் வருகை தருமாறு நூலகர் இ. தர்மலிங்கம் கேட்டுள்ளார்.

## வரணி மருந்தகத்துக்கு தொலைபேசி வசதி

தென்மராட்சி, நவ.16

வரணி மத்திய மருந்தகத்திற்கு தொலைபேசி வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்படவுள்ளது. இவ்வருட பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத்திட்ட நிதியில் 50ஆயிரம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை - சாவகச்சேரியில் உள்ள தென்மராட்சி கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்திற்கு உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்கும் நிதிஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என தெரிவிக்கப்படுகின்றது.

### ராஜபக்ஷ திறந்து வைக்கும் இந்திய மேயர் மாநாடு

## தமிழ் நாடு மேயர்களை பகிஷ்கரிக்க கோருகிறார் டாக்டர் ராமதாஸ்

சென்னை, நவ 16

இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஆரம்பித்து வைக்கவிருக்கும் இந்திய மேயர்கள் மாநாட்டில் தமிழ்நாடு மேயர்கள் எவரையும் கலந்துகொள்ள வேண்டாம் என்று பாட்டாளி மக்கள் கட்சி நிறுவுனர் டாக்டர் ராமதாஸ் கேட்டுள்ளார்.

வட இந்தியாவில் உத்தராஞ்சல் மாநிலத்தின் டெராடூன் நகரில் நடைபெறவிருக்கும் இந்தியாவின் பல்வேறு மாநிலங்களையும் சேர்ந்த மாநகர சபைகளின் மேயர்கள் கலந்துகொள்ளும் மாநாட்டை இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷ ஆரம்பித்து வைப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இலங்கை ஜனாதிபதியால் திறந்து வைக்கப்படவிருக்கும் மேயர்கள் மாநாட்டை தமிழ் நாடு மேயர்கள் பகிஷ்கரிக்க வேண்டும் என்று டாக்டர் ராமதாஸ் கேட்டுக்கொண்டுள்ளார்.

இந்தியாவுக்கு வரவிருக்கும் இலங்கை ஜனாதிபதியிடம் யாழ்ப்பாணத்தை தென் பகுதியுடன் இணைக்கும் ஏ-9 பாதையைத் திறந்து விடும்படியாக எச்சரிக்கை விடுக்க வேண்டும். என்று இந்திய அரசாங்கத்தையும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

(ப)

# பயங்கரவாதக் கூட்டு நடவடிக்கை; இந்தியா - பாக். விரிவான பேச்சு!

புதுடில்லி,நவ.16

புதுடில்லியில் செவ்வாயன்று ஆரம்பமாகிய இந்திய - பாகிஸ்தான் நாடுகளின் வெளியுறவுச் செயலர் மட்டத்திலான பேச்சுகளின் போது பயங்கரவாத பிரச்சினைகள், பயங்கரவாதத்தை ஒடுக்கும் வகையில் இரு நாடுகளும் இணைந்து செயற்படவேண்டிய கூட்டு நடவடிக்கைகள், காஷ்மீர் விவகாரம் போன்ற விடயங்கள் குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்திய வெளியுறவுச் செயலாளர் சிவ் சங்கர்மேனன், பாகிஸ்தான் வெளியுறவுச் செயலாளர் ரியாஸ் முகம்மது கான் ஆகியோருக்கிடையில் இருநாள் பேச்சுகள் செவ்வாய்க்கிழமை மற்றும் புதன்கிழமையும் இடம்பெற்றன.

இந்தப் பேச்சுகள் தொடர்பில் தகவல் தெரிவித்த இந்திய வெளியுறவுச் செய்தித் தொடர்பாளர் நவ்தேஜ் சர்னா -

இரு நாட்டு வெளியுறவுச் செயலர்களும், தத்தமது நாட்டுப் பிரதிநிதிகள் குழுவுடன் பேச்சுகளில் ஈடுபட்டனர். மும்பையில் ஜூலை மாதம் இடம்பெற்ற தொடர் ரயில் குண்டுவெடிப்புச் சம்பவத்தின் பின்னர் தடைப்பட்ட பேச்சுகள் தற்பொழுதுதான் இடம்பெற்றது.

ஹவானாவில் இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் மற்றும் பாகிஸ்தான் ஜனாதிபதி பர்வேஷ் முஷாரப் ஆகியோர் வெளியிட்ட பிரகடனத்தின் அடிப்படையில் பேச்சுகள் இடம்பெற்றுவருகிறது.

பிரகடனத்துக்குப் பின்னர் எடுக்கப்பட்ட நடவடிக்கை, அதில் ஏற்படும் முன்னேற்றம், உத்தேச தீவிரவாத ஒழிப்புக்கான கூட்டுத் திட்டம், காஷ்மீர் பிரச்சினை, சியாச்சின் விவகாரம் உள்ளிட்டவை குறித்து இருதரப்பினரும் விரிவாக விவாதித்தனர்.

இரு நாடுகளும் தத்தமது தரப்பில் எடுத்துவரும் பரஸ்பர நம்பிக்கையூட்டும் நடவடிக்கைகள் தொடர்பாகவும் விவாதிக்கப்பட்டது. குறிப்பாக, எல்லைக்கட்டுப்பாட்டுக் கோடு இருநாட்டு மக்களும் சந்தித்தல், மீனவர் பிரச்சினை, கைதிகள் பிரச்சினை, பாதுகாப்பு உள்ளிட்ட அம்சங்கள் குறித்து ஆலோசிக்கப்பட்டது.

இரு நாடுகளிடையே, வர்த்தகம் மற்றும் பொருளாதார உறவுகளை மேம்படுத்துவது குறித்தும் விவாதிக்கப்பட்டது.

செவ்வாய்க்கிழமை மாலை, பாகிஸ்தான் வெளியுறவுச் செயலர், இந்திய வெளியுறவு அமைச்சர் பிரணாப் முகர்ஜியைச் சந்தித்துப் பேசினார். அச்சமயம் பயங்கரவாதத்தை ஒடுக்க இரு தரப்பும் இணைந்து போராட வேண்டியதன் அவசியம் குறித்து பிரணாப் வலியுறுத்தினார்.

இரு நாடுகளும் மேற்கொண்ட பரஸ்பர நம்பிக்கையூட்டும் நடவடிக்கைகளால், தற்போதைய நிலையில் சாதகமான மாற்றம் ஏற்பட்டிருப்பதையும், பாகிஸ்தானில் பூகம்பம் ஏற்பட்ட போது இந்தியா செய்த உதவிகள் குறித்தும் பிரணாப் அங்கு சுட்டிக்காட்டினார் - என்றார் சர்னா.

வடகிழக்கிலுள்ள அருணாச்சலப் பிரதேச மாநிலம் சீனாவுக்குச் சொந்தமானது என இந்தியாவுக்கான சீனத் தூதர் தொலைக்காட்சி ஒன்றுக்கு வழங்கிய செவ்வி குறித்து சர்னாவிடம் கேட்டபோது -

இது குறித்து வெளியுறவு அமைச்சர் தெரிவித்த கருத்தைத் தவிர சொல்வதற்கு ஒன்றுமில்லை என்று தெரிவித்தார்.

அருணாசலப் பிரதேசம் இந்தியாவின் ஓர் அங்கம் என்று பிரணாப் முகர்ஜி திட்டவட்டமாகக் கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## வவுனியாவிலிருந்து 300 பயணிகள் நேற்று பஸ்களில் திருகோணமலைக்கு!

வவுனியாவிலிருந்து யாழ். மாவட்டத்திற்குச் செல்வதற்காக நேற்று நண்பகல் 300 பயணிகள் ஆறு பஸ்களில் திருகோணமலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

வவுனியா அரச செயலகத்தில் தம்மைப் பதிவுசெய்து அதற்கான பற்றுச்சீட்டுகளைப் பெற்றுக் கொண்டவர்கள் மட்டுமே அனுப்பப்பட்டுள்ளனர்.

பிரயாணி ஒருவர் பிரயாணச் செலவாக வவுனியாவிலிருந்து திருகோணமலைக்குச் செல்வதற்கு 300 ரூபா செலுத்தவேண்டும். அத்துடன், திருகோணமலையிலிருந்து யாழ்ப்பாணம் செல்வதற்கு 1,500ரூபா செலுத்தப்பட வேண்டும் என்று வவுனியா அரச செயலகம் தெரிவித்துள்ளது.

பிரயாணி ஒருவர் தன்னுடன் 30 கிலோகிராம் பொருள்களை எடுத்துச் செல்வதற்கு அனுமதி வழங்கப்பட்டது. பயணிகள் பெரும்பாலும் அத்தியாவசியப் பொருள்களையும், வெள்ளைப்பூடு, சிகரட், மரக்கறி எண்ணெய் போன்றவற்றினையும் கொண்டு செல்வதைக் காண முடிந்தது.

(ஐ)

# தமிழர்கள் மீதான கொலைகளை நிறுத்தக் கோரி செவ்வாயன்று ஐரோப்பிய ஒன்றியத்திடம் மகஜர்

### பெல்ஜியத் தமிழர்கள் கையளித்தனர்

இலங்கையில் தொடரும் தமிழ் மக்கள் மீதான கொலைகளை நிறுத்தக் கோரி ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகளிடம் பெல்ஜியத் தமிழ் மக்கள் சார்பில் மகஜர் ஒன்று கையளிக்கப்பட்டது.

பெல்ஜியம் பிரஸல்ஸில் உள்ள ஐரோப்பிய ஒன்றியத்தில் ஐரோப்பிய ஒன்றிய வெளிவிவ்கார அமைச்சர் வின்சன் கரன், ஐரோப்பிய ஒன்றியத்தின் தெற்காசிய வெளிவிவகார அமைச்சர் கீலன் கம்பல் ஆகியோருடன் தமிழ்மக்களின் பிரதிநிதிகள் சந்திப்பு ஒன்றை நடத்தினர். அப்போது ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகளிடம் மகஜர் ஒன்று கையளிக்கப்பட்டது.



இச்சந்திப்பின் போது அனைத்துலக தமிழர் மனித உரிமைப் பொதுச் செயலாளர் கிருபாகரன் கலந்துகொண்டு வாகரைப் படுகொலை, கிளிநொச்சி மருத்துவமனைத் தாக்குதல், மாமனிதர் ரவிராஜ் படுகொலை உள்ளிட்ட ஸ்ரீ லங்கா அரசின் தமிழினப் படுகொலைகளையும் அரசபடைகளில் சிறுவர் ஆட்சேர்ப்பு, ஏ-9 பாதை விவகாரம் உள்ளிட்ட தமிழ் மக்களின் அவல நிலை பற்றியும் எடுத்து விளக்கினார்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் அமைச்சர்கள் இவ்விடயங்களை எதிர்வரும் 20ஆம் திகதி திங்கட்கிழமை நியூயோர்க்கில் நடைபெறும் இணைத்தலைமை நாடுகளின் மாநாட்டில் கவனமெடுக்கப்படும் எனத் தெரிவித்துள்ளனர்.

இக்கலந்துரையாடல் ஐரோப்பிய ஒன்றிய வளாகத்தில் 45 நிமிடநேரம் இடம்பெற்றது.

இச்சந்திப்பு நடைபெற்றுக் கொண்டிருந்த அதேநேரத்தில் ஐரோப்பிய ஒன்றிய வளாக முன்றலில் சீரற்ற காலநிலையையும் பொருட்படுத்தாது பச்சிளம் குழந்தைகளுடன் கூடி நின்ற பெல்ஜியம் வாழ் தமிழ் மக்கள் உணர்வுபூர்வமாக ஒன்றுகூடி ஸ்ரீ லங்கா அரசின் தமிழினப் படுகொலைகளைக் கண்டித்து தங்கள் எதிர்ப்புகளைத் தெரிவித்திருந்தனர்.(அ-1)




## சு.கட்சி சார்பில் மூவர் நியமனம்

ஸ்ரீல.சு.கட்சி - ஐ.தே.கட்சி இடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கை முறையாக நடைமுறைப் படுத்தப்படுவதைக் கண்காணிக்க ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, ஸ்ரீல. சு.கட்சி சார்பில் மூவரை நியமித்துள்ளார். ஐ.தே. கட்சி இதற்கென ஏற்கனவே மூவரை நியமித்துள்ளது.

ஸ்ரீ.ல.சு.கட்சி சார்பில் அதன் பொதுச் செயலாளர் அமைச்சர் மைத்திரிபால சிறிசேன, அமைச்சர்களான மங்கள சமரவீர, நிமல் சிறிபால டிசில்வா ஆகியோரே நியமிக்கப்பட்டுள்ளனர்.

(ஐ)

## மரண அறிவித்தல்

### பொன்னையா அழகராசா



பொலிகண்டியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா அழகராசா நேற்று (15.11.2006) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா - தெய்வானை தம்பதியரின் அன்பு மகனும் சிவபுண்ணியம் - பொன்னம்மா தம்பதியரின் மருமகனும் இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும் துரைராசா, நாகராசா ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஞானாம்பிகை, கோமிளாதேவி, இந்திராணி, ஜெயராணி, சிவனருட்செல்வன், ஜீவாராணி ஆகியோரின் பாசமிகு தந்தையும் நவநீதகிருஷ்ணன், பாலச்சந்திரன், நிறஞ்சன், தனுஜா, குயோத்திரன் ஆகியோரின் பாசமிகு மாமனும், வாசுதேவன், வாசுகி, சாந்தி, ஜெயந்தன் ஆகியோரின் பெரியப்பாவும் சுயிந்தன், சுயிந்தா, ஜீவிந்தன், அஜந்தன், தனுசன், விதுசா, ஜெனார்த்தனன், சிவகரன், அஜந்தினி ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.11.2006) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


*தகவல்:*
**சிவனருட்செல்வன் (மகன்)**

*பாலாவித்தெரு,*
*பொலிகண்டி, வல்வெட்டித்துறை.*
*01628832676, 07257902329.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாவக்ச்சேரியில் மாமனிதரின் இல்லத்தில் இடம்பெற்ற இறுதிக்கிரியைகள் ...... அஞ்சலி நிகழ்வுகளின் போது....


மாமனிதரின் மனைவி இறுதி அஞ்சலி


மகன் இறுதிக்கிரியைகள் செய்தபோது


தனையனைப் பிரியமுடியாமல் கதறி அழும் தாய்


யாழ். மாவட்ட நீதிபதிகள், சட்டத்தரணிகள் இறுதி அஞ்சலி


இறுதி அஞ்சலி செலுத்துவதற்குத் திரண்ட மகளிரில் ஒருபகுதியினர்


தென்னிலங்கை ஊடகவியலாளர்கள்.


இரங்கல் உரையாற்றும்..... தென்னிந்தியத் திருச்சபைப் போதகர் வசந்தகுமார் அடிகளார்.
சட்டத்தரணிகள் சார்பில் த.வேலாயுதம்
எஸ்.கஜேந்திரன் (நா.உ.)
கி.சிவனேசன் (நா.உ.)
மாவை சேனாதிராசா (நா.உ.)
டிறிபேர்க் கல்லூரி முன்னாள் அதிபர் மு.நாகேந்திராசா


யாழ். அரச அதிபர் கே.கணேஷ்
பத்மினி சிதம்பரநாதன் (நா.உ.)
கே.துரைரத்தினசிங்கம் (நா.உ.)
எம்.கே.சிவாஜிலிங்கம் (நா.உ.)
எஸ்.கஜேல் பிரேமச்சந்திரன் (நா.உ.)
செல்வம் அடைக்கலநாதன் (நா.உ.)

### கிளிநொச்சியில் அஞ்சலிக் கூட்டம்.....





## தென்மராட்சியில் பிறந்தாலும் தேசிய ரீதியில் மக்களின் மதிப்பை பெற்ற தலைவர் ரவிராஜ்

### இரங்கல் உரையில் மாவை சேனாதிராஜா எம்.பி. பெருமிதம்

தென்மராட்சி, நவ.16

''மாமனிதர் ரவிராஜ் தென்மராட்சியில் பிறந்த போதிலும் தேசிய ரீதியில் அனைத்து மக்களினதும் நன்மதிப்பைப் பெற்றுக்கொண்ட ஒரு தலைவர்.''

- இவ்வாறு புகழஞ்சலி செலுத்தினார் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா.

நேற்றைய இறுதிச் சடங்குக்கு முன்பாக இடம்பெற்ற இரங்கல் கூட்டத்தில் உரையாற்றிய மாவை சேனாதிராஜா எம்.பி. மேலும் கூறியதாவது:-

''மாமனிதர் நடராஜா ரவிராஜ் அரசியலுக்குள் நுழைந்து பத்து வருடங்கள் என்றாலும் அவர் ஒரு பழுத்த அரசியல்வாதி போன்ற அனுபவத்துடன் செயல்பட்டவர். எந்தவொரு விடயத்தையும் நாடாளுமன்றத்திலும் சரி, வெளியேயும் சரி, அடுத்தவருக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் துடிப்புடன் கையாளும் ஆற்றல் உள்ளவர்.

தமிழ் மக்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளைச் சிங்கள மக்களுக்குப் புரியக் கூடிய வகையில் அவர்களது மொழியிலேயே ஊடகங்கள் மூலம் தெரியப்படுத்திய பெருமையும் தம்பி ரவிராஜையே சாரும்.

மாமனிதர் ரவிராஜ், தென்மராட்சிப் பிரதேசத்தில் பிறந்து யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தபோதிலும் தென்னிலங்கையில் உள்ள அனைத்து இன மக்களினதும் நன்மதிப்பைப் பெற்றவர்.

கொழும்பில் எம்மால் கடந்த திங்கட்கிழமை நடத்தப்பட்ட கண்டனப் பேரணியில் மூவின மக்களும் தமது வர்த்தக நிலையங்களை மூடிப் பேரணியில் கலந்து கொண்டமை அவரின் அளப்பரிய சேவைக்குச் சான்று பகர்ந்தது. அவர் அரசியலுக்கு வந்த பின்னர் தனது சேவையை விஸ்தரித்துச் செயல்பட்டு சர்வதேச மட்டத்தில் பெயர் பெற்றார்.

(08ஆம் பக்கம் பார்க்க)

## முஸ்லிம்கள், சிங்களவர்களுக்கும் நிறைந்த சேவை புரிந்தவர் ரவிராஜ்

### பத்மினி சிதம்பரநாதன் எம்.பி. இரங்கல் உரை

சாவகச்சேரி, நவ.16

தமிழர் பிரதேசங்களுக்கு வெளியில் சிங்கள மக்களுக்கும், முஸ்லிம்களுக்கும் சேவை புரிந்து அவர்களிடமும் நன்மதிப்புப் பெற்றுக் கொண்டவர் ரவிராஜ்.

- இவ்வாறு தனது அஞ்சலி உரையில் குறிப்பிட்டார் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி பத்மினி சிதம்பரநாதன்

சாவகச்சேரியில் உள்ள ரவிராஜின் இல்லத்தில் நேற்று நடைபெற்ற இரங்கல் கூட்டத்தில் பதமினி எம்.பியும் உரையாற்றினார். அவர் தனது உரையில் கூறியதாவது:-

''நாம் தமிழ் மக்களின் வாழ்வாதரத்திற்காகச் செய்யும் ஒவ்வொரு போராட்டத்திலும் நேர்த்தியாக முனைப்புடன், முழு ஆர்வத்துடன் செயல்படும் தலைவர் ரவிராஜ். கொல்லப்படுவதற்கு முன்னர் கூட நாங்கள் ஐ.நா. சபை அலுவலகம் முன்பாகப் போராட்டம் நடத்த முனைந்தபோது கூட அதற்காக முழு மூச்சுடன் பாடுபட்டவர். திறமையாகச் செயல்பட்டார். அது மட்டுமல்ல, மும்மொழிகளிலும் சரளமாக உரையாடவும், பேசவும் கூடிய ஆற்றல் கொண்டவர். தனது பிரதேசம் மட்டுமல்ல, தமிழ் மக்கள் வாழும் எந்தப் பகுதிக்கும் சென்று சேவை செய்ய முன்னின்று பாடுபட்டவர்.

அது மட்டுமல்லாது சிங்கள, முஸ்லிம் மக்களிடத்திலும் நல்ல நன்மதிப்புப் பெற்றவர். அவர்களுக் காவும் பல உதவிகளைச் செய்தவர்.'' - என்றார்.

ரவிராஜ் கல்வி கற்ற பாடசாலை யான சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியின் முன்னாள் அதிபர் மு. நாகேந்திரராஜா உரை நிகழ்த்துகையில் -

(08ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விண்ணப்பிக்கவும்

★செய்திப் பத்திரிகையில் உதவி ஆசிரியராகவும், அலுவலகச் செய்தியாளராகவும் பணியாற்றிய ஐந்து வருடங்களுக்குக் குறையாத முன் அனுபவம் உள்ளவர்கள் 22.11.2006ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.

★முழுமையான சுய விவரங்களுடன், சிபார்சு செய்யக்கூடிய இருவரின் நற்சான்றுப் பத்திரங்கள், கிராம சேவகரின் வதிவிட அத்தாட்சிப் பத்திரம் ஆகியவற்றை இணைத்து அனுப்புதல் அவசியம்.

★யாழ். மாநகர சபை எல்லைக்குள் வசிப்பவர்களுக்கும், ஆங்கில அறிவுடையோருக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.

★வயதெல்லை - 25 முதல் 45 வரை.

★சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

விளம்பர இலக்கம்: 121
உதயன் பணிமனை
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

## வாழ்த்துகின்றோம் வரவேற்கின்றோம்



அதிவண. கலாநிதி
**டானியல் தியாகராசா**

அவர், அன்று ஒரு சிறந்த துடுப்பாட்ட வீரர்,
புதிய ஏற்பாட்டுத்துறையில் விற்பனர்,
தென்னிந்திய திருச்சபை யாழ். அத்தியட்ச ஆதீனத்தின்
4 ஆவது பேராயர். எங்கள் யாழ். மத்திய கல்லூரியின் மைந்தர் -
யாழ். மத்தியின் முதலாவது பேராயர்.
அவரை வரவேற்று வாழ்த்துகின்றோம்.
மத்தியின் மகிமை நித்தியம் நிலைக்கும்.

யாழ். மத்திய விளையாட்டுக் கழகம்.
Jaffna Central Sports Club.
யாழ்ப்பாணம். (சி/51331)

## கண்ணீர் அஞ்சலி

யா/வட இந்து மகளிர் கல்லூரியின் விஞ்ஞான ஆய்வுகூட உதவியாளர்
**அ.சபாம்புநாதபிள்ளை**
14.11.2006இல் அகால மரண மானதையிட்டு ஆழ்ந்த துயரடைவதோடு அவரது குடும்பத்தினருக்கும் எமது அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
அலுவலக ஊழியர்கள், மாணவர்கள்.

## ஈரவிழிகளுடன் இரண்டாமாண்டு நினைவலைகள்

அன்னை மடியில் 12 . 08 . 1943



ஆண்டவன் சந்நிதியில் 16 . 11 . 2004

**அமரர் மரியாம்பிள்ளை யோசேப்**
(இளைப்பாறிய கிராமசேவை உத்தியோகத்தர், சமாதான நீதவான்)
'ஆண்டவர் தம் அன்பர்களின் சாவு அவரது பார்வையில் மிக மதிப்புக்குரியது'
சீரோடும் சிறப்போடும் எமை வாழவைத்த தந்தையே!
சமூகமே வாழ்வு என்று ... வாழ்ந்த சான்றோனே!
ஈராண்டுகள் மறைந்தன உமை நாம் இழந்து
நாம் ஆறாத்துயரில் அனுதினமும் துடிக்கின்றோம்
எமை விட்டு நீர் மறைந்தாலும் உம் உருவம்
என்றும் எம் உள்ளங்களில் வாழும்
நின் ஆத்ம சாந்திக்காய் நிதமும் - நாம்
இறைவனிடம் இறைஞ்சுகின்றோம்.

உம் பிரிவில் தவிக்கும்
குடும்பத்தினர்
உற்றார், உறவினர்.
தாளையடி கிழக்கு, தாளையடி. (55219)

## 6ஆம் ஆண்டு நினைவலைகள்

மண்ணில் 17 . 09 . 1921



விண்ணில் 22 . 11 . 2000

**அமரர் அருணாசலம் ஆறுமுகம்**
(திதி:16.11.2006 ஏகாதசி)
(சமாதான நீதிவான், முன்னாள் உப அதிபர்,
சா/இந்துக் கல்லூரி ஆரம்பப் பாடசாலை)

ஆண்டுகள் ஆறு மறைந்தோடிப் போனாலும்
உங்கள் திருவுருவம் எங்கள் மனதை விட்டு நீங்காது
பாசத்தின் பிறப்பிடமாய் வாழ்ந்த உங்கள்
ஆத்மா சாந்திபெற ஆண்டவனை வேண்டுகிறோம்.

"ஜெயபதி", தாமோதரம்பிள்ளை வீதி,
சாவகச்சேரி. (55184)
- குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி

யாழ்/கோண்டாவில்
இந்து மகா வித்தியாலயத்தின்
ஓய்வு பெற்ற ஆசிரியர்
அமரர்
**சின்னையா தேவராசா**
அவர்களின்
பிரிவு குறித்த
எமது கண்ணீர் அஞ்சலி

எண்ணவே இல்லை - உங்கள்
இறுதிநாள் இதுவோ...
என்றும்
எண்ணங்கள் மனதில் ஆட
இதுவரை உங்கள் சேவை
அர்ப்பணிப்பு எண்ணி எங்கள்
இதயத்து அஞ்சலிகள்

பாடசாலைச் சமூகம்.
(55249)

## தவறிவிட்டது

சங்கானை கிழக்கு, பிரான்பற்று, பண்டத்தரிப்பு முகவரியைச் சேர்ந்த செல்லப்பா சரஸ்வதி என்னும் பெயருடைய தேசிய அ.அட்டை (505705947V), நாகராசா சரஸ்வதி என்னும் பெயருடைய விசேட அ.அட்டை (0905013583) என்பன 2.11.2006 அன்று யாழ்.நகரில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்காணும் முகவரியில் ஒப்படைத்துதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (55227)


## Diploma in Internet & E-Mail

Speed Batch Only 10 Hours
- Start on :- 18.11.2006
- Days :- Sat, Sun
- Time :- 12.00 p.m
- Only For 10 Students

Fees :- 1000/=

பதிவுகளை முன்கூட்டியே மேற்கொள்ளவும்

C.B Computer Academy
T.P No. 021-4590291 Station Road, Kondavil.


## மகளிர்தின நிகழ்வுகள்

யாழ்.திருநெல்வேலி குமாரசாமி வீதியில் அமைந்துள்ள பகவான் ஸ்ரீ சத்தியசாயி சேவா நிலையத்தில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு பஜனைகளும் மகளிர்தின நிகழ்வுகளும் இடம் பெறவுள்ளன.

திருவிளக்குப் பூஜை மற்றும் சொற் பொழிவுகள், கருத்துக்களம், நடன நிகழ்வு போன்ற பல கலை நிகழ்வுகள் இடம் பெறவுள்ளன. (202-79)

## குருநகருக்கான குடிதண்ணீர் விநியோகம் நேற்றுமுதல் தடை

யாழ்ப்பாணம்,நவ.16

குருநகர் பிரதான நீர்த்தாங்கிக்கு நீரேற்றும் பிரதான குழாயில் உடைவு ஏற்பட்டுள்ளதன் காரணமாக அவசர திருத்த வேலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இதன் காரணமாக குருநகர் தாங்கியிலிருந்து குடிதண்ணீரைப் பெறுவோருக்கான வினியோகம் நேற்று புதன் கிழமை முதல் இரண்டு நாள்களுக்கு மட்டும் தடைப்பட்டிருக்கும் என மாநகர சபை ஆணையாளர் அறிவித்துள்ளார். (1)

## யாழ்ப்பாணம் மாநகரசபை
## ஆதனவரி அறிவித்தல்-2007

மாநகரசபைகள் கட்டளைச்சட்டத்தின் (252 ஆம் அத்தியாயத்தின்) கீழ் அளிக்கப்பட்ட அதிகாரங்களின் படி யாழ்ப்பாணம் மாநகரசபை பின்வருமாறு தீர்மானித்துள்ளமை இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

01. மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 238ஆம், 247ஆம் பிரிவுகளின் பிரகாரம் நேர் முன் ஆண்டான 2006ஆம் ஆண்டுக்கான பெறுமதி மதிப்பீட்டை அல்லது ஆதன மதிப்பீட்டை குறிப்பிட்ட விடயங்களில் அவசியமெனக் கருதப்படக்கூடியதாக அத்தகைய திருத்தங்களுடன் 2007 ஆம் ஆண்டுக்கான மதிப்பீடாக அல்லது ஆதனவரி மதிப்பீடாக கைக்கொள்ளுதல்.

02. அடுத்து திருத்தியபடியான முற்கூறிய கட்டளைச் சட்டத்தின் 238 ஆம் பிரிவின் நியதிப்படி யாழ்ப்பாணம் மாநகரசபைப் பரிபாலன எல்லைக்குட்படும் சகல வீடுகள் ஒவ்வொரு விவரணத்தையும் கொண்ட கட்டடங்கள், சகல காணிகள், குடிமனைகள் எதனதும் வருடாந்தப் பெறுமதியின் மீது 2007ஆம் ஆண்டிற்கு பின்வரும் வீதங்களை உண்டு பண்ணவும் விதிக்கவும்.

அ) 1 ஆம், 2 ஆம், 3 ஆம், 4 ஆம் ,5 ஆம், 6 ஆம், 7 ஆம், 8 ஆம், 9 ஆம், 10 ஆம், 11 ஆம், 12 ஆம், 13 ஆம், 14 ஆம், 15 ஆம், 16ஆம், 17 ஆம், 18 ஆம், 22 ஆம், 23 ஆம் வட்டாரங்களில் 12 சதவீதத்திற்கான (பன்னிரண்டு சதவீதம்) ஒரு விகிதம்.

ஆ) 19 ஆம், 20 ஆம், 21 ஆம் வட்டாரங்களில் 18 சதவீதத்திற்கான (பதினெட்டு சதவீதம்) ஒரு விகிதம்.

இ) நீர்ச் சேவையால் பயனடையும் ஆதனங்களுக்கு பந்தி 2. (அ), (ஆ) இல் சொல்லப்பட்ட வீத வரிகளுக்கு மேலதிகமாக 2 சதவீதத்திற்கான (இரண்டு வீதம்) ஒரு விகிதம்

03. அ) மேற் கூறப்பட்ட வீத வரிப்பணங்கள் யாவையும் நான்கு சம கந்தாய தவணைகளில் 2007 ஆம் ஆண்டு முறையே மார்ச் 31, யூன் 30, செப்ரெம்பர் 30, டிசம்பர் 31 திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ செலுத்தப்பட வேண்டும்.

ஆ) 2007ஆம் ஆண்டு ஜனவரி 31 ஆம் நாளில் அல்லது அதற்கு முன்னர் வருடாந்த வீதவரி முழுமையாகச் செலுத்தப்பட்டால் ஒரு 10% (பத்து சதவீதம்) விகிதம் கழிவு அனுமதிக்கப்படும் என்பதுடன் வீதவரி வருமதியாகவுள்ள அந்தக் கந்தாயத்திற்குரிய முதல் மாதத்திற்குள்ளாக கந்தாயவரி செலுத்தப்பட்டால் ஒரு 5% (ஐந்து சதவீதம்) கழிவு அனுமதிக்கப்படும்.

04. மேற்கூறப்பட்ட பந்தி 3. அ, இல் குறிப்பிடப்பட்ட உரிய திகதிகளுக்கு முன்பு குறித்த வீதவரிகளைச் செலுத்தாத விடத்து வெறும் காணிகள் மற்றும் வதிவிடங்கள் மீது 15% (பதினைந்து சதவீதம்) இலும் மற்றும் ஏனைய இடங்கள் மீது 20% (இருபது சதவீதம்) த்திலுமான விறாந்துச்செலவு அறவிடப்படும்.

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
2006.11.09 (சி-51342)

மூ.செ.சரவணபவ.
யாழ்.மாநகர ஆணையாளர்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



### திரு நடராஜா சிவரத்தினம்

இலங்கை வங்கி மேற்தரக் கிளையின் சிரேஷ்ட முகாமையாளராக பணிபுரிந்துகொண்டே பல சமூக சேவைகளில் ஈடுபட்டுவரும் ந.சிவரத்தினம் ஐயா அவர்கள் இலங்கை வங்கியின் வட பிராந்திய செயற்பாட்டு முகாமையாளராக (Operations Manager) பதவிஉயர்வு பெற்று தனது கடமைகளை தொடர உள்ளதையிட்டு நாம் எமது வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

எமது ஸ்தாபனம் Pronto Lanka (Pvt) Ltd வட பிராந்தியத்தில் தனது வங்கிச் சேவையை ஆரம்பிப்பதற்கும் இன்றுவரை தொடர்ந்து நடத்துவதற்கும் காரணகர்த்தாவாக இருந்து வரும் சிவரத்தினம் ஐயாவை கொழும்பிலுள்ள எமது தலைமை அலுவலகம் மட்டுமல்லாது இலங்கையிலுள்ள சகல புரண்டோ (Pronto Lanka) சமூகமும் வாழ்த்துவதில் பன்மடங்கு மகிழ்ச்சி அடைகின்றோம்.

சிவரத்தினம் அவர்களின் தன்னலமற்ற சேவை தொடர வாழ்த்துகின்றோம்.

கிளை அதிகாரியும் சக ஊழியர்களும்
Pronto Lanka (Pvt) Ltd.
No.217 2nd Cross Street, Jaffna.
T.P.: 021 222 4030
(55076)

## அக மகிழ்ந்து பட்டம் பெற வாழ்த்துகிறோம்



விஜயகுமார் கமலாதேவி (சாந்தா)
தம்பதிகளின் மகனான
**விஜயகுமார் மன்மதராஜ்**
இன்று (16.11.2006) வியாழக்கிழமை கொழும்பு
பண்டாரநாயக்க சர்வதேச மண்டபத்தில்
Surveying Science (B.Sc)பட்டமளிப்பு
வைபவத்தில் பட்டம் பெறவுள்ளார்.
அவருடன்

K.திலிப்குமார் - அராலி
J.யசோதரன் - இருபாலை
S.யசோதா - காரைநகர்
E.ஜெயசந்திரன் - ஹட்டன்
T.சுபாகரன் - மல்லாகம்
S.சுதர்ஷன் - உரும்பிராய்
P.சர்மிளன் - கொக்குவில்
N.புவிகரன் - உரும்பிராய்
S.பத்மகாந்தன் - திருநெல்வேலி

மாணவர்களும் பட்டம் பெறவுள்ளனர். அனைவரும் மென்மேலும் பல பட்டங்கள் பெற்று உயர்வு பெற்று வாழ வாழ்த்துகிறோம்.

அம்மன் வீதி, திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம். (55246)
வி.விஜயகுமார் குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமாதானப் பயணத்தை மேலும் சக்திபெற செய்வதே ரவிராஜுக்கான நன்றிக்கடன்

## அஞ்சலிச் செய்தியில் எதிர்க்கட்சித் தலைவர் ரணில்

கொழும்பு, நவ.16

நடராஜா ரவிராஜின் கொலை மூலம் தேசியப் பிரச்சினைக்கான தீர்வைத் தேடிச் செல்லும் வழிகளை மூடிவிடலாம் என எவராவது நினைத்தால் அது ஏமாற்றம் ஆகும். அவர் சென்ற சமாதானப் பயணத்தை மேலும் சக்தி பெறச்செய்வதே நண்பர் ரவிராஜுக்கு நாம் செய்யும் நன்றிக்கடன் ஆகும்.

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு ஓர் அறிக்கையில் தெரிவித்திருக்கிறார்.

அவரது அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

தமிழ் மக்களின் அபிலாஷைகள் மாத்திரம் அல்ல சகோதர சிங்கள மற்றும் முஸ்லிம் மக்களின் கருத்துகள் சம்பந்தமாகவும் ஆழமான தேர்ச்சியும் புரிந்துணர்வும்கொண்ட முதுபெறும் அரசியல்வாதியின் மறைவு, தேசிய பிரச்சினைக்கான தீர்வை தேடிச் செல்லும் பயணித்திற்கான சாவு மணியாகும்.

நடராஜா ரவிராஜ் எப்பொழுதும் தேசிய பிரச்சினைக்கு சுமுகமான தீர்வைப்பெற்றுக் கொள்வதற்காக மிகவும் அர்ப்பணிப்புடன் செயற்பட்ட ஒருவர். இறுதித் தீர்வொன்றை எய்துவதற்கு இருதரப்பினரும் ஆழமாக கலந்தாலோசிக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் தொடர்ந்தும் உறுதியாக இருந்தவர். இலங்கையின் ஒருமைப்பாடு பற்றிய பாரியதோர் நம்பிக்கை அவரிடம் குடிகொண்டிருந்தது.

அவர் சிங்கள மக்களுக்கு சிங்கள மொழியில் கருத்துக்களை எடுத்துரைத்தார். அதுமட்டுமல்ல முஸ்லிம் மக்களுக்காகவும் முன்னின்ற சந்தர்ப்பங்கள் பல. மொழியை செங்கற்வேலியாகக் கொண்டு முட்டிமோதும் சமூகமொன்றில் அவர் மொழியை சகோதரத்துவத்தின் பாலமாக உபயோகித்து வந்தார்.

இந்த அப்பாவி மனிதனை கொலை செய்தது ஏன்?

அவரைக் கொலைசெய்து தேசிய பிரச்சினைக்கான தீர்வைத் தேடிச்செல்லும் வழிவகைகளை மூடிவிடலாம் என யாரும் நினைப்பார்களாயின் அது ஒரு ஏமாற்றமாகும். அவரைக் கொலை செய்ததன் மூலம் தேசியப் பிரச்சினைக்கு சுமுகமான தீர்வைப் பெற்றுக் கொள்வதைத் தடுக்கலாம் என யாரும் நினைப்பார்களாயின் அது ஒரு ஏமாற்றமாகும். அவரை கொலை செய்ததன் மூலம் நாடாளுமன்றத்தை செயலிழக்கச் செய்யவோ அல்லது அச்சுறுத்தவோ முடியும் என யாராயினும் நினைப்பார்களாயின் அது ஒரு ஏமாற்றமாகும்.

இன்று இங்கு கூடியிருக்கும் ஆயிரக் கணக்கான மக்களும் உலகிற்கு எடுத்துரைப்பதும் இந்த உண்மையையேயாகும்.

அவர் சென்ற சமாதானப் பயணத்தை மென்மேலும் சக்திபெறச் செய்வதே நண்பர் ரவிராஜிற்கு நாம் செய்யும் நன்றிக்கடன் ஆகும். மேலும் தேசிய பிரச்சினைக்கு அரசியல் தீர்வை நாடிச்செல்லும் பயணத்தை மென்மேலும் துரிதப்படுத்துவதுமா[கும்].


இதற்காக இச்சந்தர்ப்பத்தில் இ[...]யுத அப்பாவி மனிதநேயரின் பூதவு[டல்] முன் நாம் அனைவரும் மீண்டுமொரு உறுதிமொழி கொள்வோம் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## புலிகள் வசமுள்ள கடற்படையினரை விடுவிக்க உறவினர்கள் கோரிக்கை

கொழும்பு, நவ.16

கடந்த வாரம் விடுதலைப் புலிகளினால் வடமராட்சிக் கடற்பரப்பில் வைத்து கைது செய்யப்பட்ட கடற்படையினரை விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறு அவர்களது உறவினர்கள் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரைக் கோரியுள்ளனர்.

கொழும்பிலுள்ள போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைமையகத்துக்கு நேற்றுமுன்தினம் காலை சென்று கண்காணிப்புக்குழு அதிகாரிகளைச் சந்தித்த குறித்த உறவினர்கள், விடுதலைப் புலிகளுடன் தொடர்பு கொண்டு குறித்த கடற்படையினரை விடுவிக்க [நட]வடிக்கை எடுக்குமாறு மிகவும் உருக்கமாக வேண்டுகோள் விடுத்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. (த-12)



தென்னிந்தியத் திருச்சபையின் புதிய யாழ். பேராயர் அதி வண. டாக்டர் டானியல் எஸ்.தியாகராஜாவை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மரியாதையின் நிமித்தம் அழைத்து கலந்துரையாடியபோது எடுக்கப்பட்ட படம்.

# வாகரை எல்லைப் பகுதிக்குள் இராணுவத்தினரின் புதிய நிலைகள்

கொழும்பு, நவ.16

மட்டக்களப்பு மாவட்டத்தில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள வாகரைக்கு அப்பால் எல்லைப் பகுதிகளில் இராணுவத்தினர் ஊடுருவி புதிய நிலைகளை அமைத்து பலப்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டுவருகின்றனர்.

கடந்த ஒருவாரகாலமாக வாகரையில் கிருமிச்சை, குஞ்சன்குளம், மதுரங்குளம் போன்ற மக்கள் குடியிருப்புக்கள் மீது படையினர் தொடர் ஷெல் தாக்குதல்களை நடத்திவருகின்றனர்.

இந்நிலையில் நேற்றுமுன்தினம் மதுரங்குளம் பகுதியில் ஊடுருவிய படையினர் அங்குள்ள பாடசாலைகளில் புதிய காவலரண்களை அமைத்து அப்பகுதியைப் பலப்படுத்திவருகின்றனர் என்று புலிகளின் அரசியல்துறையினர் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரிடம் முறையிட்டிருக்கின்றனர்.

இதேவேளை, நேற்றுமுன்தினமும் வாகரைப் பகுதியில் மக்கள் குடியிருப்புக்களை நோக்கி ஷெல் மற்றும் 'கிபிர்' விமானத் தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளன என்று அங்கிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

## வாகரையில் டிசம்பர் 17 புலமைப் பரிசில் பரீட்சை!

கொழும்பு, நவ.16

மட்டக்களப்பு மாவட்டத்தின் வாகரை மற்றும் கதிரவெளிப் பிரதேசப் பரீட்சை நிலையங்களுக்கான தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையை எதிர்வரும் டிசம்பர் 17ஆம் திகதி நடத்த ஏற்பாடாகியுள்ளது என பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

இந்த வருடத்துக்கான தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை கடந்த ஓகஸ்ட் 12ஆம் திகதி நடத்தப்பட்டபோதும் வடக்கு - கிழக்கு மாகாணத்தில் அது நடத்தப்படவில்லை.

கடந்த 4ஆம் திகதி வடக்கு - கிழக்கில் அந்தப் பரீட்சை நடத்தப்பட்டது. எனினும், வாகரை, கதிரவெளிப் பகுதிகளில் இடம்பெற்ற அசம்பாவிதங்கள் காரணமாக பரீட்சை இரண்டாவது தடவையாகவும் தடைப்பட்டுப்போனது.

அந்தப் பரீட்சையே எதிர்வரும் டிசெம்பர் 17ஆம் திகதி நடத்தப்படவிருக்கின்றது என்று பரீட்சைத்த திணைக்களம் தெரிவித்தது. (த-12)

# பொருளாதாரம், பாதுகாப்பு இரண்டிலும் நாட்டை மோசமான நிலைக்கு கொண்டுவந்துள்ளார் மஹிந்த

## மக்கள் பிரதிநிதிகளின் உயிருக்கே உத்தரவாதம் இல்லை என்கிறது ஐ.தே.கட்சி

கொழும்பு, நவ.15

சமாதானமான ஒரு சூழ்நிலையில் நாட்டை பொறுப்பேற்ற ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இன்று நாட்டைப் பொருளாதார ரீதியிலும், பாதுகாப்பு ரீதியிலும் படுமோசமான நிலைக்கு கொண்டுவந்திருக்கிறார் என்று ஐக்கிய தேசியக் கட்சி குற்றஞ்சாட்டியுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடகவியலாளர் மாநாடு எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றிய கட்சியின் பேச்சாளர் ஜயந்த கருணாதிலக எம்.பி. மேற்கண்ட குற்றச்சாட்டை வெளியிட்டார்.

அவர் கூறியதாவது:-

மக்களின் பிரதிநிதிகளான எம்.பிக்களின் உயிர்களுக்குகூட இன்று உத்தரவாதம் இல்லை. நாட்டின் இன்றைய பாதுகாப்பு சூழ்நிலை மிக மோசமாக இருக்கிறது. ரவிராஜ் எம்.பியின் கொலையை சிங்கள அமைப்புகள் மட்டுமன்றி சிங்கள மக்களும் வன்மையாகக் கண்டிக்கின்றனர்.

புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன்தான் மஹிந்தராஜபக்ஷவை ஜனாதிபதி ஆசனத்தில் அமரவைத்தார்.

ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரம சிங்க சமாதானமான ஒரு நாட்டையே அவரிடம் ஒப்படைத்தார். இன்று நாட்டின் நிலை என்ன? அராஜகம் தலைதூக்கியுள்ளது. கொலை, கொள்ளை என நாடு முழுவதிலும் பாதுகாப்பற்ற சூழ்நிலை காணப்படுகிறது. விலைவாசி நூற்றுக்கு 75 வீதம் அதிகரித்துள்ளது. 10 ரூபாவிற்கு செய்யும் வேலையை இரண்டாயிரம் வரை கொடுத்து செய்யவேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

விலைவாசி அதிகரிப்பினால் விவசாயிகளே பெருமளவில் பாதிக்கப்படுகின்றனர். பசளை விலைகள் அதிகரித்துள்ளதால் விவசாயப்பொருட்களின் உற்பத்தி விலைகள் அதிகரிக்கின்றன. ஆனால், அதற்கு ஏற்ற வகையில் விற்பனை விலை அதிகரிக்கவில்லை.

ஒரு வருடத்திற்கு முன்னர் சமாதானமான நிலையில் நாட்டைக் கையேற்ற ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தற்போது நாட்டை பொருளாதார ரீதியிலும் பாதுகாப்பு ரீதியிலும் படுமோசமான நிலைக்கு கொண்டுவந்திருக்கிறார்.

ரவிராஜ் எம்.பியின் கொலை விசாரணைகளை ஸ்கொட்லாண்ட் பொலிஸ் மூலம் மேற்கொள்ள அரசுக்கு ஒத்துழைப்பு வழங்குவோம். சமாதானமுன்னெடுப்புகள், பொருளாதார அபிவிருத்தி, நாட்டின பாதுகாப்பை உறுதிப்படுத்தல் போன்ற விடயங்களில் அரசுக்கு ஒத்துழைப்பு வழங்கும் அதேவேளை தொடர்ந்தும் எதிர்க்கட்சியாகவே செயற்படுவோம்.

- இவ்வாறு ஜயந்த கருணதிலக எம்.பி. தெரிவித்தார். (ஐ)

# நாட்டின் பாதுகாப்பு நிலை குறித்து ஜனாதிபதியுடன் ரணில் கலந்துரையாடல்

கொழும்பு, நவ.16

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும், எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் கடந்த திங்கட்கிழமை சந்தித்து நாட்டின் பாதுகாப்பு நிலைமை பற்றிக் கலந்துரையாடி இருக்கின்றனர்.

முக்கியமாக தேசிய பாதுகாப்பு தொடர்பாகவே இரு தலைவர்களும் நீண்டநேரம் விவாதித்தனர் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பேச்சாளர் ஜயந்த கருணாதிலக நேற்றுமுன்தினம் ஊடகவியலாளர்களிடம் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் செய்தியாளர் மாநாடு எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நடைபெற்றது.

நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு சமாதானம் நிலவ வேண்டியது அவசியம். இதற்கு சமாதான முயற்சிகளை முன்னெடுக்க வேண்டியுள்ளது என்று எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியிடம் வலியுறுத்தினார் என்று செய்தியாளர் மாநாட்டில் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# ஜி.சீ.ஈ. சாதாரணப் பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் அடுத்தவாரம்

கொழும்பு, நவ. 16

எதிர்வரும் டிசம்பர் மாதம் நடைபெறவுள்ள ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் அடுத்தவாரம் விநியோகிக்கப்படும் என்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அனுர எதிரிசிங்க தெரிவித்துள்ளார்.

டிசம்பர் மாதம் 11ஆம் திகதி முதல் 21ஆம் திகதிவரை நடைபெறும் சாதாரண தரப் பரீட்சைக்குப் பாடசாலைப் பரீட்சார்த்தி, வெளிவாரிப் பரீட்சார்த்திகள் என 5 லட்சத்து 40 ஆயிரம் பேர் தோற்றுகின்றனர்.

வெளிவாரிப் பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள் தற்போது தபாலில் இடப்பட்டுள்ளன. பாடசாலைப் பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள் உரிய பாடசாலை அதிபர்களுக்கு விரைவில் அனுப்பிவைக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

வடக்கு - கிழக்குப் பகுதிகளில் நிலவும் அசாதாரண சூழ்நிலை காரணமாக அங்குள்ள மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றமுடியாத நிலை தோன்றியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

வடக்கு, கிழக்கில் அடிக்கடி எதுவித முன்னறிவித்தலுமின்றி மின் துண்டிக்கப்படுவதால் மாணவர்கள் பாடங்களை மீட்க முடியாமல் பல்வேறு அசௌகரியங்களை எதிர் நோக்குகின்றனர் என்று பெற்றோர் விசனம் தெரிவிக்கின்றனர். (த)

# முக்கிய விடயங்கள்பற்றி ஜே.வி.பி. குழு ஜனாதிபதியைச் சந்தித்து ஆலோசனை

கொழும்பு, நவ.16

வரவு - செலவுத்திட்டம் மற்றும் தற்போதைய அரசியல் சூழ்நிலை, வடக்கு - கிழக்கின் தற்போதைய நிலை தொடர்பாக ஜே.வி.பி. எம்.பிக்கள் குழுவொன்று கடந்த திங்கட்கிழமை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை சந்தித்துப் பேச்சு நடத்தியது என்று ஜனாதிபதி செயலகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அலரி மாளிகையில் நடைபெற்ற இச் சந்திப்பில் விமல் வீரவன்ச, அநுரகுமார் திசாநாயக்க, கே.டி.லால்காந்த் ஆகியோர் கலந்து கொண்டனர்.

- ஜனாதிபதியுடன் அமைச்சர்களான மைத்திரிபால சிறிசேன, நிமல் சிரிபால டி சில்வா, சுசில் பிரேமஜெயந்த, அநுர பிரியதர்ஷன யாப்பா, மங்கள சமரவீர ஆகியோரும் டயஸ்அழஹப்பெரும எம்.பியும் இப் பேச்சில் கலந்துகொண்டனர். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

# VACANCIES IN THE FACULTY OF MEDICINE

University of Jaffna will entertain applications from qualified persons for the under mentioned posts:

Senior Professor /Professor in Anatomy / Community Medicine / Pathology / Forensic Medicine / Medicine / Pharmacology / Obstetrics & Gynaecology / Paediatrics / Surgery

Senior Lecturer Grade I / Senior Lecturer Grade II / Lecturer (Probationary) in Anatomy/Biochemistry/Physiology / Community Medicine / Pathology/ Microbiology / Parasitology /Forensic Medicine/ Pharmacology / Psychiatry/ Paediatrics/Obstetrics & Gynaecology / Surgery.

Chair in Oncology/Orthopedic Surgery

Clinical Psychologist

**Qualifications:**

The minimum qualifications for the above posts could be obtained on request. Applicants are expected to possess **MBBS** Degree for the above posts. However applications from candidates with **BDS / BVSc** degree may also be considered for the posts in **Biochemistry.**

| **Post** | **Salary scale** |
|---|---|
| Senior Professor | Rs.57,755 - 12x900 - 68,555/- p.m |
| Professor | Rs. 50,905 - 13x850 - 61,955/ - p.m |
| Senior Lecturer Gr.I | Rs.42,650 - 7x800 - 48,2501 - p.rn |
| Senior Lecturer Gr.II | Rs.37,650 - llx700 - 45,350/- p.m |
| Lecturer (Probationary) | Rs.26,900 - 10x585 - 32,750/- p.m |

**Note:** In addition to the above salary, the following allowances will also be paid:

i. An academic allowance equivalent to 25% of the basic salary

ii. Cost of living allowance of Rs.l,375/- p.m

**Statutory benefits:**

i. Sabbatical leave entitlement for the holders of the Post of Senior Lecturer Gr.II and above.

ii. Membership in Universities Provident Fund and Pension Scheme in the University system.

iii. Gratuity payments

iv. Employees' Trust Fund benefits.

v. Free Medical Services.

**Closing Date:**

| | |
|---|---|
| **Post of Senior Professor/Professor** | **10.02.2007** |
| **Other posts** | **27.12.2006** |

Applications for the post of Senior Professor should be accompanied by the following in accordance with the University Grants Commission circular No.838 dated 26.01.2004:

a) The Curriculum Vitae

b) A self assessment, as per the. marking scheme, the applicants contribution to the following areas **after** the applicant became a Professor: ..'

Teaching and academic development

Research and creative works

Dissemination of knowledge and University and National Development.

Applications for the post of Professor should be accompanied by the following in accordance with the University Grants Commission circular No.869 dated 30.11.2005:

a) The Curriculum Vitae

b) A self assessment, as per the marking scheme, the applicants whole career specifying the contribution to:

Teaching and academic development

Research and creative works

Dissemination of knowledge and University and National Development

c) Three copies of the publications, research papers and other relevant documents

d) Title of five outstanding research papers/ publications

Applications and other documents for the Post of Senior Professor/Professor shall be sent to the **Vice-Chancellor** with a covering letter. Applications for the other posts shall be sent to the Senior Assistant Registrar (Establishments).

Application forms and other details may be obtained from the office of the Senior Assistant Registrar/ Establishments, University of. Jaffna, Sri Lanka, either in person or by post, on a payment of Rs. 100/- per form. Those who wish to obtain application forms by post are requested to send a Money Order/Postal Order drawn in favour of the **Bursar, University. of Jaffna.** together with a self -addressed stamped envelope 23xlO c.m. in size.

Those who wish to apply for more than one post should make separate applications.

Applicants from the University System/Government Departments/ Corporations and Statutory Board should channel their applications through the Head of the respective Institutions. Applications received after the closing date will be rejected without intimation. Only short listed applicants will be called for an interview.

**REGISTRAR**

**UNIVERSITY OF JAFFNA SRI LANKA**

09.11.2006

## UTI

**யூனியன் ரஸ்ட் அன்ட் இன்வெஸ்ற்மென்டஸ் லிமிட்டட்**

(கலைப்பில் உள்ளது)

# வைப்புக்களை மீளளித்தல்

மேற்படி கம்பனியின் வைப்பாளர்களின் வைப்பு மீதியின் (முதலின்) ஒரு பகுதியை மீளளிப்பதற்கான ஒழுங்குகள் 2006 ஜூலை 21 ஆம் திகதி முதல் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேற்படி மீளளிப்பை 31 டிசம்பர் 2006 வரை அலுவலக நாட்களில் கீழ்காணும் முகவரியில் காலை 9.30 மணி முதல் மாலை 3.00 மணி வரை கீழ்காணும் ஆவணங்களை சமர்ப்பித்து பெற்றுக் கொள்ளலாம்.

* வைப்புச்சான்றிதழ் / மாற்றப்படாத காசோலை / அனுமதியளிக்கப்பட்ட கடிதம் ஆகியவற்றின் மூலப்பிரதி, போட்டோ பிரதி.
* தேசிய அடையாள அட்டை/ ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தும் ஏனைய ஆவணங்களின் போட்டோ பிரதி.
* வைப்பாளர் இறந்திருப்பின் அதனை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் மற்றும் மீளளிப்பை பெறுவதற்கு உரிமையுடைய சட்ட ரீதியான வாரிசுகள் பற்றிய விபரம் ஆகியவற்றின் போட்டோ பிரதி.
* கூட்டு வைப்புகள் (Joint Deposit) ஆயின் வைப்பாளர்களின் பெயர் விபரம் மற்றும்

தேசிய அடையாள அட்டையின் போட்டோ பிரதி அனுமதிக்கடிதம் ஆகியவை.

மீளளிப்புகள் யாவும் வைப்பாளரின் பெயரில் எழுதப்பட்ட பிறருக்கு மாற்ற முடியாத காசோலை மூலம் வழங்கப்படும். சேமிப்பு கணக்கில் வைப்பிலிடுவதாயின் அதன் விபரங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

நேரில் சமூகமளிக்க முடியாதோர் மேற்படி ஆவணங்களை தமது தேசிய அடையாள அட்டையின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதியுடன் முறையாக அதிகாரமளிக்கப்பட்ட தமது பிரதிநிதி மூலம் அனுப்பித் தமக்குரிய மீளளிப்பை பெற்றுக்கொள்ளலாம். மேலும் மேற்படி ஆவணங்களை சுயமுகவரியிடப்பட்ட கடித உறையுடன் சேர்த்து பதிவுத்தபாலில் அனுப்புவதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

2006 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு முன்னர் மேற்படி வைப்பு மீளளிப்பை பெற்றுக்கொள்ளாத வைப்பாளர்கள் பகிர்ந்தளிப்பிலிருந்து விலக்கிக் கொள்ளப்படுவர் என இத்தால் அறியத் தருகிறோம்.

Liquidators

**Union Trust & Investments Ltd,**

**C/O: SJMS Associates,**

**2nd Floor, No.30, Galle Road, Wellawatte,**

**Colombo - 06. T.P: 2508874**

## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

### Post of Librarian

University of Jaffna will entertain applications from qualified persons for the Post.of **Librarian** upto **10.02.2007.**

**Qualifications:**

1. A first or a second class in a special degree or a first or second class (upper division) in a General degree; and
2. the academic Postgraduate Diploma in Librarianship of the University of London or' an equivalent or higher qualification; and
3. at least fifiteen (15) years' experience after obtaining a first degree or at least ten (10) years after obtaining the qualification at (2) above in one or both of the following:

i)experience in Librarianship in a recognized Library;

ii)research in Library Science or any other field in a recognized institution; and 4. publications in the field of Library Science

**Salary scale**

Rs.50,905 - 13x850 - 61,955/-p.m

**Note:** In addition to the above salary, the following allowances will also be paid:

i) An academic allowance equivalent to 25% of the basic salary (ii) Cost of living allowance of Rs.l,375/ -p.m

**Statutory benefits:**

i) Sabbatical leave entitlement

ii) Membership in Universities Provident Fund and Pension Scheme in the University system.

iii) Gratuity payments

iv) Employees' Trust Fund benefits.

v) Free Medical Services.

Application forms and other details may be obtained from the office of the Senior Assistant Registrar/ Establishments, University of Jaffna, Sri-Lanka, either in person or by post, on a payment of Rs.l 00/- per form. Those who wish to obtain application forms by post are requested to send a Money Order/Postal Order drawn in favour of the **Bursar, University of Jaffna** together with a self - addressed stamped envelope 23xlO c.m. in size.

Applicants from the University System/Government Departments/ Corporations and Statutory Board should channel their applications through the Head of respective Institutions. Applications received after the closing date will be rejected without intimation. Only short listed applicants will be called for an interview.

**REGISTRAR**

**University of Jaffna Sri Lanka**

**06.11.2006**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடாநாட்டு மக்களின் தேவைகளை வழங்குவதற்கு அரசு உடன் அவசர நடவடிக்கை எடுக்கவேண்டும்

**கடந்த ஒகஸ்ட் 11ஆம் திகதி யாழ். குடாநாட்டில் உருவான அசாதாரண நிலையைத் தொடர்ந்து வெளிமாவட்டங்களினின்றும் தனிமைப்படுத்தப்பட்ட யாழ்.குடாநாட்டு மக்கள் தமது அன்றாட அத்தியாவசிய உணவுப்பொருள்களை ஏனைய வசதிகளையும் பெறமுடியாத சிரமத்தை எதிர்நோக்க நேரிட்டுள்ளது. யாழ்.குடாநாட்டுப் பொதுமக்களின் இன்றைய சிரமங்களை உள்ளது உள்ளவாறு தென்பகுதி மக்களது கவனத்துக்கும் சிந்தனைக்குமாக முழுமையாக வெளிப்படுத்தப்படுவதில்லை. அந்தவகையில், இன்று யாழ்.குடாநாட்டு மக்கள் அனுபவிக்க நேர்ந்துள்ள கட்டுப்பாட்டுச் சிரமத்தை வெளிக்கொணரும் வகையிலான இந்தக் கட்டுரை கடந்த 5ஆம் திகதிய 'மவ்பிம' பத்திரிகையில் பிரசுரமாகியது. அதன் தமிழாக்கம் கீழே தரப்படுகிறது.**

இந்நாட்டின் வடபுலத்திலும் தென்புலத்திலும் வாழும் மக்களின் எதிர்பார்ப்புகள் அனைத்தையும் சிதைத்துவிட்டே அண்மையில் இடம்பெற்ற ஜெனிவாப் பேச்சுகள் முறிவடைந்தன. வடபுலத்தில் இடம்பெற்று வரும் தாக்குதல்களும் அத்தகைய தாக்குதல்களை முறியடிப்பதற்கு மேற்கொள்ளப்படும் எதிர்த் தாக்குதல்களும் அப்பிரதேசங் களில் வாழும் பொதுமக்களின் அன்றாட வாழ்க்கையைத் துன்பியல்மிக்க பெரும் அவலநிலைக்குள் தள்ளிவருகிறது. இந்நிலையில், விடுதலைப் புலிகள் அமைப்பும் அரசும் போர்நிறுத்த உடன்பாடு செம்மையாக நடைமுறைபபடுத்தப்படும் விதமாக ஒழுகுமாயின், அது ஒரு வகையில் இம்மக்களுக்குக் குறைந்தபட்ச ஆறுதலை வழங்க வாய்ப்பாக அமையலாம்.

ஜெனிவாப் பேச்சு மேசையில் சந்தித்துக்கொண்ட அரச தரப்பும் விடுதலைப் புலிகள் தரப்பும் போர்நிறுத்த உடன்பாட்டிற்கு அமைவாகச் செயற்படுவதற்கு இணங்கி சங்கற்பம் பூண்டுள்ளபோதிலும் சர்வதேச சமாதானப் பிரதிநிதிகள் பேச்சுமேசையை விட்டுப் புறப்பட்டுச் செல்வதற்கு முன்னரே வடபுலத்தில் தாக்குதல்கள் ஆரம்பமாயின. அத் தாக்குதல்களுக்குப் பதில் தாக்குதல்களும் நடத்தப்பட்டன. தற்போது விடுதலைப் புலிகளை அடக்கி ஒடுக்கிவிடும் நோக்குடன் அரசு நடத்தும் தாக்குதல்கள் உச்சம் பெற்றுள்ளன. இச்சம்பவங்களை உற்றுநோக்கும்போது சமாதானத்தை எட்டும் நோக்கில் ஜெனிவாவில் சந்தித்துக் கொண்ட அரச தரப்பும் விடுதலைப் புலிகளும் சமாதானத்தை விட யுத்தத்தில் அதிக நாட்டம் கொண்டுள்ளதையே புலப்படுத்துவதாகக் கருதமுடிகிறது.

### சகல மக்களும் பீதியில்

எவ்வாறாயினும் இந்த நிலைப்பாடு காரணமாக இன்று வடபுலத்து மக்களும் தென்புலத்து மக்களும் பீதியில் உறைந்து போயுள்ளதைத் தெளிவாக உணரமுடிகிறது. அண்மித்து வரும் மாவீரர்களது நினைவுநாள் அஞ்சலி நிகழ்ச்சிகளை முன்னிட்டு விடுதலைப் புலிகள் அமைப்பு தென்புலத்தில் பெரும் தாக்குதலொன்றை நடத்துவதற்கு வாய்ப்பிருப்பதாக கசிந்துவரும் தகவல்கள் காரணமாக தென்பகுதி மக்கள் பெரிதும் பீதிவசப்பட்டுள்ளனர்.

அதனிடையே பயணிகள் ரயில் ஒன்று குண்டுத் தாக்குதலுக்கு இலக்காகலாம் என்ற தகவலை புலனாய்வுப் பிரிவு வெளிப்படுத்தியுள்ளது. அதனால், தெற்கில் மக்களிடையே நிலவிவரும் பீதி மேலும் வலுவடைந்துவருகிறது.

அத்தோடு பாதுகாப்புக் காரணங்களை முன்னிட்டு அடிக்கொரு தடவை திடீரென மேற்கொள்ளப்படும் ராணுவ நடவடிக்கை கள் காரணமாகவும் பொதுமக்கள் தமது அன்றாட வாழ்க்கைச் செயற்பாடுகளை மேற்கொள்வதற்குப் பெரும் தடைகள் ஏற்பட்டுள்ளன.

### வடபகுதி மக்களின் சோகநிலை

தென்பகுதி நிலைப்பாடு அவ்வாறுள்ள போது வடபுலத்து மக்கள் முகம்கொடுத்து வரும் தடைகளும், பற்றாக்குறைகளும், துன்பங்களும் நிறைந்த அவலநிலை சோகம் மிக்கதாகும். விடுதலைப் புலிகள் அமைப்பின் நடவடிக்கைகள் காரணமாக வடக்குக் கிழக்கிலுள்ள சிலபிரதேசங்கள் மீது 'கிபிர்' குண்டுவீச்சுவிமானங்கள் மூலமாகவும் பலகுழல் எறிகணைகள் மூலமாகவும் தாக்குதல்கள் நடத்தப்படுகின்றன.

# அவர்களின் வருவாய் ஈட்டும் மார்க்கங்களுக்கு தடைவிதிப்பது எந்த வகையிலும் நியாயமற்றது

இத்தகைய தாக்குதல்கள் விடுதலைப் புலிகளின் முகாம்களை இலக்குவைத்தே மேற்கொள்ளப்படுகின்றன என்று கூறப்படுகின்ற போதிலும் சில சந்தர்ப்பங்களில் இத்தாக்குதல்கள் அப்பாவிப் பொதுமக்களின் உயிர்களைக் காவுகொள்வதுடன் மக்கள் கடும்காயங்களுக்கும் ஆளாகின்றனர். அவ்வாறு பாதிப்புகள் இடம்பெறாத சந்தர்ப்பங்களில் தாக்குதல் பீதி காரணமாக அச்சுற்றாடலில் வசிக்கும் பொது மக்கள் திசை தெரியாது சிதறி ஓடும் சம்பவங்கள் நிறையவே உள்ளன. பொதுமக்கள் இவ்வாறு தொடர்ச்சியாகப் பீதிவயப்பட்டு தாக்கங்களுக்கு உள்ளாகி வருவதனால் ஒருமனிதனது இயல்பான மனநிலையில் தாக்கம் ஏற்படுத்தப்படுகிறது என்பதைப் புதிதாகச் சொல்லவேண்டியதில்லை.

### உய்த்துணரும் மனோபாவம் இல்லை

வடக்குக் கிழக்குப் பிரதேசங்களில் விடுதலைப் புலிகளால் தொடுக்கப்படும் தாக்குதல்கள் மற்றும் அரசினால் தொடுக்கப்படும் தாக்குதல்களின் மத்தியில் சிக்குண்டு அல்லற்படும் மக்களின் வாழ்க்கை உண்மையில் சோகமயமானதே. இவற்றை உய்த்துணரும் நடுவுநிலை மனோபாவம் தெற்கில் செயற்படும் பெருமளவு ஊடகங்கள் மத்தியில் இல்லையென்பதை அவற்றின் நடைமுறைகள் தெளிவாகப் புலப்படுத்துகின்றன.

இக்காரணத்தை முன்னிட்டே மனிதாபிமானம் என்ற அடிப்படையில் அப்பிரதேசங்களில் வாழும் தமிழ்ப்பொதுமக்கள் தமது அன்றாட வாழ்க்கையில் முகம்கொடுக்க நேர்ந்துள்ள நிலைப்பாடு பற்றித் தெளிவுபடுத்தவேண்டிய அவசியம் நேர்ந்துள்ளது.

### சுமக்கமுடியாத வாழ்க்கைச் செலவுச் சுமை

இன்று இந்நாட்டில் உச்சம்பெற்றுள்ள பொருளாதாரத் தாக்கம் காரணமாக உருவாகியுள்ள பற்றாக்குறை வாழ்க்கையை எதிர்கொள்ள இயலாத நிலையில் தென்பகுதி வாழ் சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் சலுகைகளைக் கோரி-சம்பள அதிகரிப்பைக் கேட்டு-வாழ்க்கைச் செலவின் அதிகரிப்புக்கு ஏற்றவாறு கொடுப்பனவுகளை வழங்குமாறு கோரி - போராட்டங்களில் இறங்கியுள்ளதைக் காணமுடிகிறது. அத்தோடு, தொழிற்சங்கங்களும் போராட்ட நடவடிக்கைகளில் இறங்கியுள்ளன. அதுமட்டுமன்றி, தொழிலதிபர்களுடனும் அரசுடனும் பேச்சுகளில் ஈடுபட்டு வருகின்றன. தம்மால் சுமக்கஇயலாத அளவுக்கு மக்கள் மீது வாழ்க்கைச் செலவுச் சுமை சுமத்தப்பட்டுள்ளமையே இந்த நிலைப்பாடு உருவாகக் காரணமாகியுள்ளது.

எத்தகைய இடர்கள், தடைகள் மத்தியில் தானும் தமது ஜீவனோபாய மார்க்கங்கள் மூலம் அன்றாடம் வருவாயை ஈட்டிக் கொள்ளும் நிலைப்பாட்டிலேயே அவர்களது வாழ்க்கை அமைந்துள்ளது. ஆயினும், அந்த வருவாய் மூலம் தமது அன்றாடச் செலவினத்தை ஈடுசெய்ய இயலாதநிலை காரணமாகவே அவர்கள் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர் என்பது மட்டும் தெளிவு. சராசரி வருவாயை ஈட்டும் தென்பகுதி வாழ் மக்களின் வாழ்வாதார நிலை இந்தளவு கடினம் மிக்கதாக இருப்பின், தமது சுய உழைப்பைக் கூட சீராக மேற்கொள்வதற்கு வாய்ப்பற்று அல்லலுறும், வடபுலத்து மக்கள் முகம்கொடுத்து வரும் பொருளாதார கஷ்டம் எத்தகையதாக இருக்கும் என்பதை உணர முடிகிறதா?

### வடபகுதி மக்களின் வருவாய் ஈட்டும் மார்க்கத்துக்குத் தடை

மேலும், வடபுலத்து மக்களுள் பெரும்பாலானோர் கீழ்மட்ட வருவாயை ஈட்டும் தரப்பினரே. பயிர்ச்செய்கையை மேற்கொண்டும் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டும் அன்றாடம் சீவனம் நடத்திவரும் அம்மக்களின் வருவாய் ஈட்டும் மார்க்கங்கள் இன்று தடைப்படுத்தப்பட்டு சிதைவடைந்துள்ளன. மழைகாலம், அவர்களது விவசாயத் தொழிலுக்குக் கேடு விளைவித்து வருகின்றது. பாதுகாப்புக் காரணங்களை முன்னிட்டு தடைகள் மீனவர்களின் கடற்தொழிலுக்கு கேடு விளைவித்துள்ளன. யாழ்ப்பாணம் உள்ளிட்ட வடபுலத்தின் ஏனைய பிர[illegible]

யும் அவற்றை இயக்கும் இயந்திரங்களையும் பாதுகாப்புப் படையினரிடம் கையளிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இவ்வளவு இடர்பாடுகள், துன்பங்கள், அவலங்களின் இடையே அத்தியாவசிய உணவுப்பொருள்கள் உள்ளிட்ட ஏனைய அன்றாடத் தேவைக்கான அத்தியாவசியப் பொருள்களின் தட்டுப்பாட்டுக்கும் முகம் கொடுக்கும் நிலைக்கு அவர்கள் இன்று ஆளாகியுள்ளனர்.

திடீரென ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்படுகிறது. யாழ். குடாநாட்டு மக்களின் ஒரு மாதத்துக்கான அரிசித் தேவை 4ஆயிரத்து 500மெற்றிக் தொன்களாகும். கோதுமை மாவின் தேவை 2ஆயிரத்து 500மெற்றிக் தொன்களாகும் ஆனால், கடந்த இருமாத காலத்தில் யாழ். குடாநாட்டுக்கு அனுப்பப்பட்டுள்ள அரிசியின் தொகை மூவாயிரத்து 624 மெற்றிக் தொன்கள் மாத்திரமேயாகும். அத்தோடு, 900மெற்றிக் தொன் கோதுமை மாவே அங்கு கிடைத்துள்ளது.

### போதிய அளவில் கிடைப்பதில்லை

இவைதவிர சீனி, பருப்பு உள்ளிட்ட ஏனைய அத்தியாவசியப் பொருள்கள் கூட போதிய அளவில் அம்மக்களுக்குக் கிடைப்பதில்லை.

இந்த நிலைமை யாழ். குடாநாட்டு மக்களை அளவுக்கு அதிகமான அசௌகரியங்களுக்கும் பெரும் அவலநிலைக்குள்ளும் தள்ளி வருகிறது என்பதைப் புதிதாகத் தெளிவுபடுத்த வேண்டுமா?

இந்தப் பற்றாக்குறை விநியோகம் காரணமாக 40 ரூபா விற்பனை செய்யப்பட்ட ஒரு கிலோ அரிசியை இன்று 150 ரூபா கொடுத்து வாங்கவேண்டிய நிலை குடாநாட்டு மக்களுக்கு ஏற்பட்டுள்ளது. அதுபோன்றே 40ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்ட 1கிலோ கோதுமை மா 300ரூபா வரை கள்ளச்சந்தையில் விற்பனை செய்யப்பட்டது. ஒரு லீற்றர் தேங்காய் எண்ணெய் 120ரூபாவிலிருந்து 350ரூபா வரை உயர்ந்துள்ளது. ஒரு லீற்றர் பெற்றோல் 400ரூபாவுக்கும் விற்பனையாகிறது. டீசல் ஒரு லீற்றரின் விலை 150 ரூபாவரை உயர்ந்துள்ளது. குழந்தைகளுக்கான பால்மா அறவே அற்றுப்போயுள்ளது. மருந்து வகைகளுக்கும் பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது. தினமும் மருந்து வில்லைகளைப் பயன்படுத்தி நோயின் தாக்கத்திலிருந்து ஓரளவுக்காவது நிவாரணம் பெறும் இருதய நோயாளர்கள், நீரிழிவு நோயாளர்கள் அவற்றைப் பெற இயலாது பெரிதும் உடல்வருந்துகின்றனர்.

மற்றும், வடபுலத்தில் மின்சாரம் தொடர்ச்சியாக கிடைப்பதில்லை. மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே வழங்கப்படுகிறது. யாழ். போதனா மருத்துவ மனைக்குக் கூட மின் விநியோகம் இல்லாமல் போயிருக்கிறது. சத்திரசிகிச்சை மூலம் குணப்படுத்தப்பட வேண்டிய கடும் நோயாளர்களுக்கு மின்சாரம் இன்மையால் சத்திர சிகிச்சைகளை மேற்கொள்ள இயலாதுள்ளது. கல்விச் செயற்பாடுகள் முடங்கிப் போயுள்ளன. தொலைபேசிச்சேவைகள் தடைப்பட்டுள்ளன. பொதுப் போக்குவரத்து சேவைகள் சீராக இடம்பெறுவதில்லை.

ஸ்ரீலங்காவைத் தமது தாய் மண்ணாகக் கொண்ட, இந்நாட்டிற்கே உரித்துடைய குடிமக்களுள் ஒரு பிரிவினர் புறமொதுக்கப்பட்டு, உதாசீனப்படுத்தப்பட்டுச் சொல் லொணாத அவலங்களுக்கு முகம் கொடுத்து வரும் நிலைப்பாட்டையே நாம் இங்கு தெளிவு படுத்தியுள்ளோம்.

### உகந்த நடவடிக்கைகள் துரிதகதியில் தேவை

இந்த மக்கள் முகம் கொடுத்து வரும் அவலங்களுக்கு முடிவுகட்டப்படும் விதமாக அவர்களது அடிப்படை மனிதாபிமானத் தேவைகள் குறைவின்றி வழங்கப்படும் விதமாக முறைப்படியான உகந்த நடவடிக்கைகளை துரித கதியில் மேற்கொள்வது அவசியம்.

அவர்களுக்குத் தேவையான அத்தியாவசிய உணவுப் பொருள்கள் கப்பல்கள் மூலம் அடிக்கடி அனுப்பி வைக்கப்படுவதாகவே அரசு தெரிவித்து வருகிறது. அவசரமாகத் தேவைப்படும் பொருள்களைக் கூட விமான மார்க்கமாக அனுப்பப்படுவதாகவும் அரசு கூறுகிறது. இவை பத்திரிகைளும் அறிக்கைகளும் வெளிப்படுத்தும் தகவல்களே.

ஆனால் யதார்த்தம் கவலைக்குரியதாகும். இந்தத் துன்பியல்மிக்க நிலைப்பாட்டிலிருந்தும் அவர்களை மீட்டெடுக்கும் கருமம் மனிதாபிமானத்துக்கும் மனச்சாட்சிக்கும் மதிப்பளிக்கும் செயற்பாடாகக் கருதப்பட வேண்டியதாகும்.

மேலும் விடுதலைப் புலிகள் அமைப்பினால் மேற்கொள்ளப்படும் வன்முறை நடவடிக்கைகளுக்கு அதேவன்முறை நடவடிக்கைகள் மூலம் பதிலடி கொடுக்கப்பட்டாலும் யுத்தத்தில் எந்த விதத்திலும் எந்தவகையிலும் சம்பந்தப்படாத - பங்காளிகள் அல்லாத - யுத்தத்துக்கு இரையாகும் தரப்பினரான அப்பாவிப் பொதுமக்கள் மீது அரசு கருணைக்கண் கொண்டு நோக்கவேண்டும்.

இந்த மக்களின் அத்தியாவசியத் தேவைகள் நிறைவுசெய்யப்படும் வகையில் அத்தியாவசிய உணவுப்பொருள்களை தென்னிந்தியாவிலிருந்து இப்பிரதேசங்களுக்கு நேரடியாக எடுத்துவருவதற்கு தென்னிந்தியாவிலுள்ள தனியார் வர்த்தகர்களுக்கு இந்நாட்டு அரசு அனுமதி வழங்கியுள்ளதாக ஊடகங்கள் தகவல் தெரிவித்திருந்தன.

### புத்திசாலித்தனமான ஏற்பாடா?

அது ஒருபுறமிருக்க இன்று இந்நாட்டில் நிலவும் பாதுகாப்புத் தொடர்பான நிலைப்பாட்டின் மத்தியில் இன்றைய சூழ்நிலையில் அவ்வாறான திறந்த அனுமதிப் பத்திரம் மூலம் இந்தியாவிலிருந்து கப்பல்கள் மூலம் பொருள்களைத் தருவிப்பதை புத்திசாலித்தனமான நடவடிக்கை என்று கருதஇயலுமா?

சுங்கத் திணைக்களத்தின் கண்காணிப்பு நடவடிக்கைகள், சோதனைகளின் மத்தியிலும் துறைமுகங்கள் ஊடாகவும் விமானநிலையங்கள் ஊடாகவும் ஏதோ ஒருவிதமாக நாட்டுக்குள் கடத்திவரப்படும் போதைப் பொருள்கள் குறித்துச் சிந்தித்துப்பார்க்கும்போது சுங்கப் பரிசோதனைகள் இன்றி கப்பல்கள் மூலம் உணவுப்பொருள்களை எடுத்துவரும் போர்வையில் வடபிரதேசத்துக்குள் போராயுதங்கள் கடத்திவரப்படுமாயின், அதன்விளைவு எத்தகையதாக அமையும் என்பதையும் ஆழ்ந்து அலசவேண்டியுள்ளது.

**தமிழில்: நாடோடி**

எத்தகைய இடர்பாடுகள், இக்கட்டுகள், அவலங்கள் இருப்பினும் அரசின் நேரடிக் கண்காணிப்பின் கீழும் அரசின் அனுசரணையுடனும் மாத்திரமே உணவுப்பொருள்கள், மருந்துவகைகள் போன்ற அத்தியாவசியப் பொருள்கள் வடபுலத்து மக்களின் தேவை கருதி இந்தியாவிலிருந்து எடுத்துவரப்படல் வேண்டும்.அவ்வாறின்றேல் இது கையேந்திப் பெற்று உண்ணும் கருமமொன்றாகவே கருதப்படக்கூடும்.

மேலும், விடுதலைப் புலிகள் அமைப்பு வடக்குக் கிழக்கு மக்களின் மனிதாபிமானத் தேவைகள் நிறைவேற்றப்படுவதன் அவசியம் பற்றிய தகவல்களைச் சர்வதேச சமூகத்துக்குத் தெரியப்படுத்தும் மார்க்கமொன்றாக சமாதானப் பேச்சுமேசையை வாய்ப்பொன்றாகப் பயன்படுத்திக்கொண்டது. இன்று அத்தகவல் சர்வதேச நாடுகளைப் பரந்த அளவில் சென்றடைந்து விட்டது.

சர்வதேச சமூகம் ஸ்ரீலங்காவுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் விதமாக அவப்பெயரை ஏற்படுத்தும் விதமாக-பயன்படுத்தப்படுவது தடுத்து நிறுத்தப்படல்வேண்டும். அது செயலுருப் பெறவேண்டுமாயின், வடபுலப் பிரதேசங்களில் அல்லலுற்று வரும் இந்நாட்டுக் குடிமக்களின் அடிப்படை மனிதாபிமானத் தேவைகள் நிறைவுசெய்யப்பட்டால் மாத்திரமே அதை நிறைவேற்ற முடியும்.

எனவே, நாட்டின் பாதுகாப்புப் பலப்படுத்தப்படும் அதேவேளை, வடபுலத்துப் பொது மக்களின் தேவைகளை வழங்கும் அவசர நடவடிக்கையொன்றை மேற்கொள்வதற்கு அரசு உடனடிக்கவனம் செலுத்தவேண்டும் என்பதை அடித்துக் கூறுகிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்

831 நீலம்

வெற்றி இலக்கங்கள்

மிதுனம்

**28 35 46 47**

**14-11-2006**

செல்லுபடியாகும் தொடர் இல. 4655022 - 4669215

ஜக்பொட் பரிசு ரூபா.3,729,050/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 306,349 | 10/- | 3,063,490/- |
| 2 இலக்கங்கள் | 28,139 | 20/- | 562,780/- |
| 1 இல. + லக்கினம் | 27,886 | 30/- | 836,580/- |
| 2 இல. + லக்கினம் | 2,551 | 100/- | 255,100/- |
| 3 இலக்கங்கள் | 757 | 500/- | 378,500/- |
| 3 இல. + லக்கினம் | 66 | 5,000/- | 330,000/- |
| 4 இலக்கங்கள் | 4 | 100,000/- | 400,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 3,729,050/- | - |
| மொத்தம் | | | 5,826,450/- |
| முச்சக்கர வண்டிகளின் பெறுமதி | 5 | 204,700/- | 1,023,500/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 365,757 | | 6,849,950/- |

இந்த வெள்ளிக்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 4,413,250/-

தொடர் இல. 5542611 க்கு மேற்பட்ட சிவப்பு நிற டிக்கட்டுக்கள் 2006 நொவெம்பர் 17 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை

33, சென் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கரவண்டி வெற்றி பெறும் ஐந்து டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| காலி | 4660639-9-72 |
| பதுளை | 4659690-2-47 |
| மாத்தளை | 4656191-0-29 |
| கொழும்பு | 4668923-5-45 |
| கம்பஹா | 4656053-9-36 |


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 27 ★ 08 ★ 1938

மறைவு 17 ★ 11 ★ 2005

**அமரர் J.R. எஸ்தர் சந்திரா** (நாரந்தனை)

*உயிர்ப்பும் உயிரும் நானே*
*என்னில் விசுவாசம் கொள்பவன்*
*இறப்பிலும் வாழ்வான்* (அரு.11.25)

**அன்னாரின் ஆத்ம இளைப்பாற்றுக்காக நாளை (17.11.2006) வெள்ளிக்கிழமை காலை 6.15 மணிக்கு யாழ்.மரிஅன்னை பேராலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.**

*இல.06 அச்சகவீதி,*
*சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.* (55213)

தகவல்:
டோனி (மகன்), குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### சின்னையா தேவராசா

(இளைப்பாறிய ஆசிரியர் யா/ கோண்டாவில் இந்து மகா வித்தியாலயம்)



இணுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும் உப்புமடம் கே.கே.எஸ். வீதி, கோண்டாவில் மேற்கைப் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா தேவராசா நேற்று (15.11.2006) புதன்கிழமை அதிகாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னையா - நாகமுத்து தம்பதியரின் மகனும் அப்புத்துரை - சிவஞானம்மா தம்பதியரின் மருமகனும் தேவி சத்தியபாமாவின் (ஓய்வு பெற்ற யா/ இணுவில் இந்துக் கல்லூரி ஆசிரியை) கணவரும் பானு, நிரோஸ் (தொடர்பாடல் கற்கை நெறி- கிழக்குப் பல்கலைக்கழகம்) ஆகியோரின் தந்தையும் இரத்தினம் - திருவிளங்கம், காலஞ்சென்றவர்களான பாலசுப்பிரமணியம், இராஜேஸ்வரி மற்றும் நேசமலர் - காலிங்கராஜா (லண்டன்), செல்வநாயகி - தர்மலிங்கம், சகுந்தலாதேவி - ஆறுமுகதாசன் (லண்டன்) ஆகியோரின் சகோதரரும் கனகலிங்கம் (கனடா), மகாலிங்கம் (கனடா), சற்குணமலர் - கனகலிங்கம் (பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (15.11.2006) பி.ப 4 மணியளவில் இணுவில் தெற்கில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தாவடி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**"இரத்தினவாசா"**
**இணுவில் தெற்கு,**
**சுன்னாகம்.** (55263)

தகவல்:
மனைவி,
பிள்ளைகள்.

# தோட்டத் தொழிலாளர் சம்பள உயர்வு பேச்சுகள் தோல்வியில் முடிவு

கொழும்பு, நவ.16

தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வு தொடர்பாக தோட்ட முதலாளிமார் சம்மேளனத்தின் தொழிற்சங்கங்கள் நடத்திய பேச்சுகள் தோல்வியில் முடிந்தன.

தொழிற்சங்கங்கள் தோட்ட முதலாளிமார் சம்மேளனத்துடனான பேச்சுகளிலிருந்து வெளியேறின என்று தேசிய தோட்டத் தொழிலாளர் சங்க பொதுச் செயலாளரும், ஊவா மாகாணசபை உறுப்பினருமான வேலாயுதம் நேற்றுத் தெரிவித்தார்.

தோட்டத் தொழிலாளருக்கு சம்பள உயர்வு பெற்றுக்கொள்வதற்காக அடுத்த கட்டமாக மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கை குறித்துப் பெருந்தோட்டத்துறைத் தொழிற்சங்கங்கள் விரைவில் ஒன்றுகூடி ஆராயவுள்ளன என்று வேலாயுதம் தெரிவித்தார்.

தோட்டத் தொழிலாளருக்கு ஒரு நாள் வேதனமாக 295 ரூபாவை சங்கங்கள் கோரின. இதற்கு முதலாளிமார் சம்மேளனம் இணங்க வில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த பல வருடங்களைப் போலல்லாமல் இவ்வருடம் தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கப் பொதுச் செயலாளர் கே.வேலாயுதம் பெருந்தோட்டத்துறையிலுள்ள அனைத்துத் தொழிற்சங்கங்களையும் ஒன்றுகூட்டி ஒரு நாளைக்கு எவ்வளவு வேதனம் கேட்பதென தீர்மானித்த பின்னரே முதலாளிமார் சம்மேளனத்துடன் பேச்சு நடத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது. (ஐ)

### தவறிவிட்டது

*கந்தேநுவர, அல்வத்த, மாத்தளை என்னும் முகவரியைச் சேர்ந்த நடராஜா திருச்செல்வம் என்பவரின் தேசிய அடையாள அட்டையும் (826022493V), நுணாவில் மேற்கு, சாவகச்சேரி நடேசலிங்கம் நளினி என்பவரின் தேசிய அ. அட்டையும் (856133257V) திருநெல்வேலி சந்தையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஒப்படைத்துதவவும்.*

**241,பருத்தித்துறைவீதி,நாற்சதுர சுவிஷேச சபை, நல்லூர். T.P-021 222 6730**


## NEW SCIENCE HALL

**A/L இரசாயனவியல்**

**க. சிவத்திரன்** B.sc(Hons)

1) 2007 A/L இற்கான மாதிரி வினாவிடை வகுப்பு.
இதில் கடந்தகால வெற்றி நிச்சயம், வேறு மாவட்ட (கொழும்பு, கண்டி, திருமலை) பாடசாலை, வலயமட்ட பரீட்சை வினாக்கள் ஆராயப்படும்.
**ஆரம்பம்**: –18.11.2006 sat. 2.15-3.45

2) மீள் பரீட்சார்த்திகளுக்கான Theory வகுப்புகள் ஆரம்பித்துவிட்டன.
Mon 12.00 - 1.30 Inorganic
Wed 12.00 - 1.30 Organic
Fri 12.00 - 1.30 Physical

3) DAY CLASS நடைபெறுகின்றன.
Inorganic, Organic, Physic ஒரே சமயத்தில் விரைவில் ஆரம்பம்

**வாரத்தில் 5 நாள்களும்**
**Mon to Fri 10.15 - 11.45**


## கண்ணீர் பூக்கள்



இணுவில் வட்டுவினி பதியுறை சாமுண்டீஸ்வரி அம்பாள் சமேத வைரவசுவாமி திருக்கோயிலின் பிரதம குருக்களாகிய

**சிவஸ்ரீ வை. பாஸ்கரக்குருக்கள் ஐயா**

14.11.2006 செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னாரது மறைவினால் ஆழ்ந்த துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அன்னாரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்தித்து எமது கண்ணீர்ப்பூக்களை அவரது காலடியிற் சமர்ப்பிக்கின்றோம்.

வட்டுவினி,
இணுவில் மேற்கு,
இணுவில்.

தேவஸ்தானத்தினர்.

## கண்ணீர் அஞ்சலிகள்



**லயன் நடராஜா ரவிராஜ்**

அவர்களின் திடீர் மறைவினால்
துயருற்றிருக்கும் அன்னாரது
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு
ஆத்ம சாந்திக்கும்
பிரார்த்திக்கின்றோம்.

(சி-51352) சாவகச்சேரி லயன்ஸ் கழகம்.

## முஸ்லிம்கள்...

(03ஆம் பக்கத் தொடர்ச்சி)

"எமது கல்லூரியின் துடிப்புள்ள இளைஞராகக் கல்லூரி விழுமியங்களை மதித்து நடந்தவர். தனக்குப் பிடித்தமான தலைவர்களின் கொள்கைகளை மதித்து, அவர்களின் செயல்பாடுகளை மதித்து மக்களுக்கு அயராது சேவை செய்தவர் ரவிராஜ்.

2000 ஆம் ஆண்டு சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி அதாவது தான் கல்வி கற்ற பாடசாலை அழிவுற்றபோது அதனை மீளச் செப்பனிட அயராது பாடுபட்டார். எமது பாடசாலை மண் மேடாகக் காட்சியழித்தது. இதற்காகப் பல திட்டங்கள் தீட்டி அதற்குப் புத்துயிர்ப்பளித்தார். அது மட்டுமல்லாமல், சாவகச்சேரியைப் புதிய நகரமாக்க - நவீன மயப்படுத்த - பல திட்டங்களை அரசு உயர் அதிகாரியுடன் கலந்தாலோசித்து நிறை வேற்றத் துணிந்தவர் மாமனிதர் ரவிராஜ்" - என்று குறிப்பிட்டார். (ஐ)

## தென்மராட்சியில்...

(03ஆம் பக்கத் தொடர்ச்சி)

இளவயதில் தனது இன்னுயிரை நீத்தாலும் இலங்கையில் மட்டுமல்ல. சர்வதேச மட்டத்திலும் தமிழ் மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் இன்னல்களை ரவிராஜ் தெளிவுபடுத்தியுள்ளார்.

இந்தச் செயல் வீரனைப் பெற்றெடுத்தவர்களும், மாமனிதரின் மனைவி, பிள்ளைகளும் தென்மராட்சிப் பிரதேச மக்களும் இதற்காகப் பெருமைப்படவேண்டும்." - என்றார். (ஐ)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 17 ✱ 07 ✱ 1977

மறைவு 17 ✱ 10 ✱ 2006

**அமரர் ஆறுமுகம் மகேஸ்வரன்** (அருண்)

**(அருண் ஹாட்வெயர் உரிமையாளர்)**

*உன்னை உத்தமனாக்கி*
*உன் கடமை தவறாமல்*
*உன்னையே அர்ப்பணித்தாயே*
*உன் குரலோசையோ எம்*
*செவிகளில் கீதம் பாடுகின்றன*

**உம்முடைய ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.**

*311,Main Street,*
*Thondamanaru.* (55106)

SATHENGINEERING CONTRACTORS.

## மரண அறிவித்தல்கள்

### சின்னத்துரை செல்லப்பா



புளியங்கூடலை பிறப்பிடமாகவும், நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை செல்லப்பா நேற்று (15.11.2006) புதன்கிழமை காலமானார்.

- அன்னார் விசாலாட்சியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - வள்ளியம்மை தம்பதியரின் மகனும், காலஞ்சென்றவர்களான சின்னப்பு - சின்னம்மா தம்பதியரின் மருமகனும், தில்லைநாதன், விஜயலட்சுமி, விமலகுமாரி, விக்னேஸ்வரி, வசந்தகுமாரி, ஜெயகுமார் ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.11.2006) வியாழக்கிழமை மு.ப. 11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் புளியங்கூடல் இந்து மயானத்திற்கு தகனக் கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**புளியங்கூடல்,**
**ஊர்காவற்றுறை.** (55250)

தகவல்:
**செ.ஜெயகுமார் (மகன்)**

### பொன்னையா நடேசு

தாவடி தெற்கு, கொக்குவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட பொன்னையா நடேசு (வர்த்தகர், வெலிமடை) நேற்று (15.11.2006) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராசம்மாவின் அன்புக்கணவரும், பிரேமகுமாரி, நந்தினி ஆகியோரின் அன்புத்தந்தையும் ந.நந்தசொரூபன், மா.கிருபாகரன் ஆகியோரின் மாமனும் பிரியங்கா, ருனேஷா, நிருஷா, பிரணவன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (16.11.2006) வியாழக்கிழமை முற்பகல் 11 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**பத்தானை வீதி,**
**தாவடி தெற்கு,**
**கொக்குவில்.**

தகவல்:
**மக்கள்,**
**மருமக்கள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி, தொலைநகல் - 222 9944, 222 9933, 222 3837

# யுத்த முஸ்தீபு நோக்குடனான வரவு - செலவுத் திட்டம்?

சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட ரவிராஜ் எம்.பியின் இறுதிக் கிரியைகள் நேற்று தென்மராட்சியில், அவரது சொந்த ஊரான சாவகச்சேரியில் நடந்து முடிந்துள்ளதுடன், துடிப்புள்ள ஓர் இளம் தமிழ் ஜனநாயகப் போராளியின் சரித்திரம் முடிவுக்கு வந்து விட்டது.

ரவிராஜ் எம்.பியின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொள்ள அவரின் உறவினர்கள் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அனைத்து எம்.பிக்கள் ஆகியோர் யாழ்.வருவதற்கும், ரவிராஜின் பூதவுடலை இங்கு எடுத்து வரவும் தனியான விமானப்படை விமான வசதியை அரசு 'தாராளமாக' - பெருமனதுடன் - வழங்கி உதவியிருக்கின்றது. அரசுத் தலைமை இந்த உபகாரத்தைச் செய்தாலும் 'சோழியன் குடுமி சும்மா ஆடவில்லை' என்பதுதான் உண்மை.

தமிழர் தாயகமான வடக்கு, கிழக்கு மாகாணங்களைப் பிரிக்கும் படி உயர் நீதிமன்றம் விடுத்த உத்தரவினால் தமிழருக்கு ஏற்படக் கூடிய பாதிப்புகளை மாற்று சட்டமூலம் ஒன்றின் மூலம் நிவர்த்தி செய்யும்படி கோரி ஆரம்பத்திலும் -

பின்னர், வாகரையில் அப்பாவித் தமிழ் அகதிகள் படுகொலை செய்யப்பட்ட இன அழிப்பு நடவடிக்கையைக் கண்டிக்கும் முகமாகவும் -

நாடாளுமன்றின் கடந்த சில அமர்வுகளில் சபைக்குள்ளேயே - சபை மண்டபத்தின் நடுவே - தரையில் அமர்ந்து தொடர்ந்து சத்தியாக்கிரகப் போராட்டம் நடத்தி வருகின்றார்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்கள்.

இன்று இலங்கை அரசின் வரவு - செலவுத் திட்டம் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படும் தினம். இச்சமயம் தமிழ்க் கூட்டமைப்பு எம்.பிக்கள் கொழும்பில் தங்கியிருந்து, நாடாளுமன்றின் வரவு - செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படும் வேளை சபைக்கு வருவார்களானால் - அதுவும் தலைநகர் கொழும்பில், பட்டப்பகல் வேளையில், நட்ட நடு வீதியில் வைத்து கூட்டமைப்பின் எம்.பி. ஒருவர் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டதால் எழுந்துள்ள பெரும் சீற்றத்தோடு அவரின் சக எம்.பிக்கள் சபைக்குச் சமுகம் கொடுப்பார்களேயானால் - நிலைமை களேபரமாகத்தான் அமைந்துவிடும்.

வரவு - செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படும் சமயத்தில் வழமையாகவே அங்கு பார்வையாளர் அரங்கு, வெளிநாட்டு இராஜதந்திரிகள், உயரதிகாரிகள், முக்கிய பிரமுகர்கள் என நிறைந்திருக்கும்.

அதுவும் இப்போது வரவு - செலவுத் திட்டத்தைச் சபையில் சமர்ப்பிக்கும் நிதி அமைச்சரின் பொறுப்பு நாட்டின் நிறைவேற்று அதிகார ஜனாதிபதியின் வசமுள்ளது. கடந்த வருடம் புதிய அரசின் வரவு - செலவுத் திட்டத்தை நிதி அமைச்சர் என்ற முறையில் ஜனாதிபதியே சபையில் பிரசன்னமாகிச் சமர்ப்பித்திருந்தார். அவரே இம்முறையும் அதை இன்று சமர்ப்பிப்பார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அப்படி அவர் அதைச் சமர்ப்பிக்கும்போது - அதுவும் முக்கிய பிரமுகர்களால் நாடாளுமன்றப் பார்வையாளர் அரங்கு நிரம்பி வழியும் சமயத்தில் - தமது சக எம்.பி. ஒருவரின் படுகொலையால் சீற்றமுற்றிருக்கும் தமிழ்க் கூட்டமைப்பு எம்.பிக்கள், சபைக்குள் தமது தொடர் சத்தியாக்கிரகத்தை மேலும் ஆக்ரோஷத்துடன் முன்னெடுத்தால் நிலைமை எப்படி இருக்கும்?

இதை நாசூக்காகச் சமாளிக்கும் விதத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் மற்றும் ரவிராஜ் எம்.பியின் நெருங்கிய உறவினர்களுக்கும் 'தாராள மனதுடன்' விமான வசதி வழங்கி நடவடிக்கை எடுத்திருக்கின்றது அரசுத் தலைமை.

விரைந்து திரும்பி கொழும்பு வருவதற்குப் பயண வசதியோ அல்லது பாதை மார்க்கமோ இல்லாத யாழ். குடாநாட்டுக்கு தமிழ்க் கூட்டமைப்பின் பெரும்பாலான எம்.பிக்கள் செல்வதற்கு ஏற்பாடு செய்ததன் மூலம் நாடாளுமன்றுக்குள் இன்று தமக்கு எழக்கூடிய இக்கட்டை - நெருக்கடியை - அவமானத்தை - அதி உத்தமர் தவிர்த்து விட்டார் என்றே கூற வேண்டும்.

ரவிராஜின் இறுதிக் கிரியைகள் நேற்று முடிவடைந்த நிலையில், இன்று பிற்பகல் வரவு - செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்னர் இந்த எம்.பிக்கள் கொழும்பு மீளுவது பெரும்பாலும் துர்லபமே.

கடந்த வரவு - செலவுத் திட்டத்தில் அரசின் செலவினம் 56 ஆயிரத்து 830 கோடி ரூபா. இம்முறை - இன்று சமர்ப்பிக்கப்படும் திட்டத்தில் அது 80 ஆயிரத்து 464 கோடி ரூபாவாக எகிறி இருக்கின்றது.

இதில் பிரதானமாக இம்முறை அதிகரித்திருப்பது அரசின் பாதுகாப்புச் செலவினம்தான். அது இந்தத் தடவை இரட்டிப்பாகின்றது.

கடந்த தடவை பாதுகாப்புக்கு 6 ஆயிரத்து 950 கோடி ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டது. இம்முறை அது 13 ஆயிரத்து 956 கோடி ரூபாவாக - இரண்டு மடங்காக - உயர்ந்திருக்கின்றது.

இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தை இராணுவத் தீவிரப் போக்குக் கண்ணோட்டத்துடன் கையாளும் அரசுத் தலைமையின் செயற்பாட்டை நோக்கும்போது, போர் எண்ணம் பொதிந்த 'யுத்த வரவு - செலவுத் திட்டம்' என்றே இது அமையப் போகின்றது என்பதைப் பாதுகாப்புத் துறைக்கான இந்த இரட்டிப்பு ஒதுக்கீடு எடுத்துக் காட்டுகின்றது.

மனித உரிமைகள், அமைதி முயற்சிகள் போன்ற விவகாரங்களில் மஹிந்தரின் அரசின் பெறுபேறுகள் மற்றும் போக்குகள் குறித்து இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் இணைத் தலைமைகள் உட்பட சர்வதேச சமூகமே அதிருப்தியுற்றுள்ள நிலைமையில் -

அமைதி முயற்சிகள் ஆக்கபூர்வமான திசையில் முன்நகராவிட்டால் நாட்டுக்கு உறுதியளிக்கப்பட்ட வெளிநாட்டு உதவிகள் வழங்கப்படமாட்டா என சர்வதேச சமூகம் கோடி காட்டியுள்ள பின்னணியில் -

இன்றைய வரவு - செலவுத் திட்டத்தில் துண்டு விழப் போகின்ற பல நூறாயிரம் கோடி ரூபாவைச் சமாளிப்பதற்கான உதவிகளையோ, நன்கொடைகளையோ நிதி அமைச்சரான ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ எப்படித் திரட்டப் போகின்றார்? நாட்டு மக்கள் மீது மேலும் சுமையைச் சுமத்தாமல், துண்டு விழும் தொகையை எதிர்கொள்வதற்கு 'அவரது மக்கள் அரசு' முன்வைக்கும் தந்திரோபாயங்கள் எவை?

இன்று மாலை அவை தெரிந்து விடும்.

# புதுவகை வைரஸ் காய்ச்சல் வலி.தெற்கில் பரவுவதாக சுகாதாரப் பகுதி எச்சரிக்கை

## 'சிக்குன்குனியா' எனச் சந்தேகம்?

யாழ்ப்பாணம், நவ.16

குடாநாட்டில் இணுவில், உடுவில், தாவடி, சுதுமலை, கோண்டாவில் ஆகிய வலி.தெற்குக் கிராமங்களில் ஒரு புதுவகையான வைரஸ் காய்ச்சல் பரவி வருவதாக் கண்டறியப்பட்டுள்ளது.

இந்தக் காய்ச்சல் 'சிக்குன்குனியா' வாக இருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகின்றது. இது குறித்து உறுதியாகக் கண்டறிவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

யாழ்.சுகாதார சேவைகள் மாகாணப் பிரதிப் பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரன் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

யாழ்.மாவட்டத்தில் இணுவில், உடுவில், தாவடி, சுதுமலை, கோண்டாவில் ஆகிய கிராமங்களில் கடந்த இரு வாரங்களாக ஓர் புதிய வகை வைரஸ் காய்ச்சல் பரவிவருவது கண்டறியப்பட்டுள்ளது. இணுவில் அரசினர் வைத்தியசாலையில் கடந்த இரு வாரங்களில் இக்காய்ச்சலினால் பாதிக்கப்பட்ட 500 இற்கு மேற்பட்ட நோயாளர்கள் சிகிச்சை பெற்றுள்ளனர். இதேபோன்று இப்பகுதியை அண்டியுள்ள அரசினர் வைத்தியசாலைகளிலும், தனியார் சிகிச்சை நிலையங்களிலும் இவ்வகையான காய்ச்சலுடன் ஏராளமானோர் சிகிச்சை பெற்று வருகின்றனர். இந்நோய் ஏற்பட்டவர்கள் கடுமையான காய்ச்சல், தலைவலி, கடுமையான மூட்டு வலி, தசைவலி, வாந்தி போன்ற அறிகுறிகளுடன் காணப்படுகின்றனர். சிலருக்குத் தோலில் செந்நிறப்புள்ளிகளும் காணப்படுகின்றன. சிலருக்கு நிணநீர்க் கணுக்களும் வீங்கிக் காணப்படுகின்றன.

இக்காய்ச்சல் பெரும்பாலும் சாதாரணமாக 4, 5 நாள்களில் குணமாகி விடுகின்றது. ஒரு சிலருக்கு மட்டும் சில பக்க விளைவுகள் தோன்றியுள்ளன. ஆனால் இந்நோயின் நேரடித் தாக்கத்தால் இறப்புகள் எதுவும் இதுவரை ஏற்[illegible]வில்லை.

இப்பகுதியில் களத்தில் [illegible]ட்ட ஆரம்ப கட்ட ஆய்வுகளின்படி [illegible] தற்போது இலங்கையில் கு[illegible]னார், மட்டக்களப்பு, அம்[illegible] [illegible]ழும்பு ஆகிய மாவட்டங்களில் பரவி வரும் வைரஸ் காய்ச்சலை ஒத்ததாகவே காணப்படுகின்றது. எனவே இந்நோய் சிக்குன்குனியாவாக இருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகின்றது. இதனை உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

### நுளம்புப் பெருக்கத்தினால்

இவ்வைரஸ் காய்ச்சல் டெங்கு நோயைப் பரப்பும் நுளம்புகளினாலேயே பரவுகின்றது. எனவே இந் நுளம்புகளின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்துவதே இந்நோயைக் கட்டுப்படுத்துவதற்கான முக்கியமான தடுப்பு நடவடிக்கையாகும்.

யாழ்.மாவட்டத்தில் அண்மைக்காலமாகப் பெய்துவரும் பருவகால மழைக்குப் பின் டெங்கு நோயைப் பரப்பும் நுளம்புகளின் பெருக்கம் அதிகரித்துள்ளது. எனவே இப் பகுதியில் இருந்து யாழ்.மாவட்டம் முழுவதிற்கும் இந்நோய் தீவிரமாக பரவ வாய்ப்புள்ளது. எனவே நுளம்பு கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை சகல தரப்பினரும் ஒருங்கிணைந்து முன்னெடுத்தால் மாத்திரமே இந்நோயைப் பரவாமல் தடுக்க முடியும்.

சுகாதாரத் திணைக்களத்தால் டெங்கு நுளம்பு அழிப்பு நடவடிக்கைகள் இனங் காணப்பட்ட பகுதிகளில் முன்னெடுக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அதே வேளை இந்நுளம்பு உற்பத்தியாகும், நீர் தேங்கி நிற்கும் சிறிய நீர்க் கொள்கலன்களான சிரட்டை, இளநீர்க் கோம்பைகள், பொலித்தீன் பைகள், தகரப் பேணிகள், பழைய ரயர்கள் போன்றவற்றை எரிக்க அல்லது புதைக்க வேண்டும். தண்ணீர்ப் பீலிகளில் நீர்தேங்காதவாறு பார்த்துக் கொள்ள வேண்டும். பூச்சாடிகளில் நீரை அடிக்கடி மாற்ற வேண்டும்.

இப்பணிகள் ஒவ்வொரு வீட்டிலும், பாடசாலைகளிலும், நிறுவனங்களிலும், வேலைத்தளங்களிலும், பொது இடங்களிலும் மேற்கொள்ளவேண்டும். இந்நோய்க்கு இதுவரை தடுப்பூசியோ அல்லது மருந்தோ கண்டுபிடிக்கப்படவில்லை. எனவே நுளம்புக் கட்டுப்பாடுதான் முக்கிய தடுப்பு நடவடிக்கை. நுளம்புக் கடியில் இருந்து தம்மைப் பாதுகாக்க நுளம்பு வலைகளையும் ஏனைய நுளம்பு எதிர்ப்பு முறைகளும் கடைப்பிடிக்க வேண்டும்.

இந்நோய் ஏற்பட்டால் பொது மக்கள் பீதியடையத் தேவையில்லை. இந்நோயின் நேரடித் தாக்கத்தினால் உயிரிழப்பு ஏற்படும் சாத்தியம் மிகக்குறைவு. ஆயினும் இந்நோய் ஏற்பட்டவர்கள் வீட்டில் தங்கியிருந்து ஓய்வெடுக்க வேண்டும். பாடசாலைக்கு அல்லது வேலைக்கு செல்வதைத் தவிர்க்க வேண்டும். போதியளவு நீராகாரம் அருந்த வேண்டும். காய்ச்சல் இருப்பின் 'பரசிற்றமோல்' (Paracetamol) வில்லைகள் எடுக்க வேண்டும். நோயின் தாக்கம் கடுமையாக இருப்பின் தகுந்த வைத்திய ஆலோசனையை நாடவேண்டும். - என்றுள்ளது. (1-51-31)

# கொம்மாதுறையில் சிப்பாய் காயம்

மட்டக்களப்பு, நவம்பர் 16

மட்டக்களப்பு, ஏறாவூர் - கொம்மாதுறைப் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கிரனேட் தாக்குதலில் படைச் சிப்பாய் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

கொம்மாதுறை - உமா அரிசி ஆலைச் சந்தியில் மாலை 4.30 மணியளவில் பாதுகாப்புக் கடமையில் படையினர் ஈடுபட்டிருந்த வேளை மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத நபரே இந்தத் தாக்குதலை மேற்கொண்டு விட்டுத் தப்பிச் சென்றுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவத்தையடுத்து படைத்தரப்பினர் பதிலுக்குத் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டனர் என்றும் அதன் பின்னர் அந்தப் பகுதியில் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்ட படையினர் 5 இளைஞர்களைக் கைது செய்து பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர் என்றும் கூறப்பட்டது. படுகாயமடைந்த சிப்பாயான சூசை ஆரியதாஸ (வயது-35) மட்டக்களப்பு வைத்தியசாலை யில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(ஐ-03)

# பணிப்பாளருக்கு பாராட்டு விழா

யாழ்ப்பாணம், நவ.16

சண்டிலிப்பாய் கோட்டக் கல்வி பணிப்பாளர் கந்தையா தனபாலசிங்கத்தின் சேவை நலன் பாராட்டு விழாவும் மணிவிழாவும் நாளை 17ஆம் திகதி காலை 8.30 மணிக்கு மானிப்பாய் இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவிருக்கின்றது.

சண்டிலிப்பாய் அதிபர் சங்கத்தலைவர் ச.சிவனேசன் தலைமையில் நடைபெறவிருக்கும் இவ்விழாவில் பல பிரமுகர்கள் அவரது சேவையைப் பாராட்டிப் பேசவிருக்கின்றனர்.

## நாளை

கார்த்திகை 01
வெள்ளிக்கிழமை
17.11.2006
திதி : துவாதசி
முன்னிரவு : 11.24
நட்சத்திரம் : அத்தம்
முன்னிரவு : 08.06
[illegible] : [illegible] - 07.30
[illegible] : 10.38 - 12.08

## கிளிநொச்சிக்கு இடம்பெயர்ந்துள்ள

# மருதங்கேணி பாடசாலைகளின் கல்வியாளர்களுக்கு சம்பளம் வழங்கக்கோரி அமைச்சுக்கு மகஜர்

கிளிநொச்சி, நவ.16

இடம்பெயர்ந்து கிளிநொச்சியில் இயங்கிவரும் மருதங்கேணிக் கோட்டப் பாடசாலைகளின் கல்வியாளர்களுக்கான சம்பளங்களை உடன் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்டவர்கள் மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளருக்கு மகஜர் ஒன்றை அனுப்பி வைத்துள்ளனர்.

கடந்த ஓகஸ்ட் மாதம் முதல் குடாநாட்டில் நிலவிவரும் அசாதாரண சூழ்நிலை காரணமாக மருதங்கேணி கோட்டத்தைச் சேர்ந்த 11 பாடசாலைகள் இடம்பெயர்ந்து கிளிநொச்சியில் இயங்கி வருகின்றன.

இங்கு பணியாற்றும் அதிபர், ஆசிரியர் உட்பட 48 கல்வியாளர்களுக்கு இடம்பெயர்ந்த பின்னர் இதுவரை சம்பளம் வழங்கப்படவில்லை.

ஆவணி மாத முற்பணமாக அவர்களுக்கு தலா 10 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டது. அதன் பின்னர் எந்தவிதக் கொடுப்பனவும் வழங்கப்படவில்லை.

அசாதாரண சூழ்நிலை நிலவுகின்ற இந்த நேரத்தில் சம்பளத்தை உடன் வழங்க நடவடிக்கை எடுக்குமாறு பாதிக்கப்பட்ட கல்வியாளர்கள் கையெழுத்திட்டு வடக்கு-கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சருக்கு மகஜர் ஒன்றை அனுப்பி வைத்துள்ளனர். (1-202)

# பெற்றோல் விநியோகம் இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், நவ.16

இந்த மாதத்துக்கான பெற்றோலைப் பெறாதவர்களுக்கான விநியோகம் இன்று தொடக்கம் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

விநியோகத்துக்கென குடாநாட்டில் 13 எரிபொருள் நிலையங்களுக்கு பெற்றோல் வழங்கப்பட்டுள்ளது.

அவற்றில் இன்று தொடக்கம் பெற்றோல் விநியோகிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

ஏனைய எரிபொருள் நிலையங்களுக்கு நாளை பெற்றோல் வழங்கப்படும் என்றும் அவற்றில் நாளை தொடக்கம் விநியோகம் இடம்பெறும் என்றும் - தெரிவிக்கப்பட்டது. (அ-1)

# மனித உரிமைகள் டிப்ளோமா கற்கை நெறிக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், நவ.15

சமாதானத்திற்கும் நல்லிணக்கத்திற்குமான பணியகம் மனித உரிமை டிப்ளோமா கற்கைநெறி ஒன்றை அடுத்த மாதம் ஆரம்பிக்கவுள்ளது.

கற்கைநெறியில் இணையவிரும்புபவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

மட்டுப்படுத்தப்பட்ட மாணவர்கள் இக்கற்றை நெறியில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.

விண்ணப்பிக்க விரும்புவோர் கற்வாஸ்.கொம், இல.26, சோமசுந்தரம் அவனியூ, சுண்டுக்குழி என்ற முகவரியில் விண்ணப்பப்படிவங்களைப் பெற்று எதிர்வரும் 5ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (202)

# சுன்னாகத்தில் மாதிரி விற்பனை நிலையம்

யாழ்ப்பாணம், நவ.16

சுன்னாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் தனது தலைமைக் காரியாலயத்தில் மாதிரி விற்பனை நிலையம் ஒன்றைத் திறந்துள்ளது.

தற்போது பங்கீட்டு அடிப்படையில் பலநோக்குக் கூட்டுறவுச்சங்கக் கிளைகள் மூலம் பொருள்கள் விநியோகம் செய்யப்பட்டுவருகின்றன. இந் நிலையில் பொது மக்கள் தமக்குரிய பொருள்களைப் பெற்றுக் கொள்வதற்கு வசதியாக இந்த விற்பனை நிலையம் திறக்கப்பட்டுள்ளது.

இந் நிலையத்தின் திறப்பு விழா அண்மையில் சங்கத் தலைவர் க. குமாரவேல் தலைமையில் நடைபெறவுள்ளது. உடுவில் பிரதேச செயலர் க. திருவாகரன் நிலையத்தைச் சம்பிரதாய பூர்வமாகத் திறந்துவைத்தார். (202-68)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "இனப்படுகொலையைத் தடுத்து நிறுத்த இந்தியப் பிரதமர் தலையிடவேண்டும்"

## அகில இந்திய சட்டத்தரணிகள் சங்கம் கோரிக்கை

புதுடில்லி, நவ.16

இலங்கையில் பரந்துபட்டளவில் நடைபெற்றுவரும் படுகொலைகளையிட்டு கவலை வெளியிட்டுள்ள அகில இந்திய சட்டத்தரணிகள் சங்கம், இந்த இனப்படுகொலைகளைத் தடுத்துநிறுத்துவதற்கு இந்தியப் பிரதமர் தயங்காது தலையிட முன்வரவேண்டும் என்று அவரிடம் கோரிக்கை விடுத்திருக்கிறது.

இலங்கைத் தீவில் பரந்துபட்டளவில் படுகொலைகள் கட்டவிழ்த்துவிடப்படிருக்கின்றன. சர்வதேச ஒழுக்க விழுமியங்கள் மற்றும் ஐ.நாவின் வழிகாட்டுதல்கள் எல்லாவற்றுக்கும் முரணாகவே இலங்கை அரசு நடந்துவருகிறது என்றும் சங்கம் குற்றஞ் சாட்டியுள்ளது.

''பிரதமர் மன்மோகன் சிங் கட்டாயம் தலையிடவேண்டும்'' என்ற வேண்டுகோளுடன் அகில இந்திய சட்டத்தரணிகள் சங்கம் நீண்ட மகஜர் ஒன்றை அவருக்கு அனுப்பிவைத்திருக்கிறது. சங்கத்தின் தலைவர் அடிங்கி அகர்வாலா, பிரதித் தலைவர் எஸ்.பிரபாகரன் ஆகியோரால் அனுப்பப்பட்டுள்ள இந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-.

''நோர்வேயின் அனுசரணையுடன் முன்னெடுக்கப்பட்டு வந்த சமாதானப் பேச்சுகள் எதுவித முன்னேற்றமும் இன்றி ஸ்தம்பித்துப் போயிருக்கிறது. புலிகளைக் கொன்றொழிக்கும் நோக்கோடு இலங்கை அரசு வன்செயல்களைக் கட்டவிழ்த்துவிட்டுவருகிறது. இலங்கை இராணுவத்தினர் சிறுவர்கள், பெண்கள் முதலானோரையும் விட்டுவைக்கிறார்கள் இல்லை. இதன் விளைவாக, தீவில் வாழுகின்ற முழுத்தமிழினமும் பயப்பீதியுடனேயே உதவிக்கு யாரும் இல்லாமல் வாழுகின்றது.

மோதல்களை உடன்நிறுத்துமாறு ஐ.நா. செயலாளர் நாயகம் கோரிக்கைவிடுத்த போதிலும், இலங்கை அரசு அதற்கு மதிப்பளிக்கவில்லை.

1983ஆம் ஆண்டு இலங்கையில் கட்டவிழ்த்துவிடப்பட்ட பரந்துபட்டளவிலான ஒரு நிலைமையையே இன்று இலங்கை கண்டுகொண்டிருக்கிறது. எனவே, சர்வதேச சமூகம் இந்த இன மோதல்களுக்கு முடிவுகட்டும்படி குரல்கொடுத்து அதனை நிறுத்திவைக்க முன்வர வேண்டும்.

ஆயிரக்கணக்கான இலங்கை அகதிகள் இந்தியா வந்துகொண்டிருக்கிறார்கள். சொத்துச் சுகங்களை எல்லாம் துறந்து வரும் இந்த அகதிகளின் அவலநிலையைப் போக்க இந்திய அரசு இலங்கையில் நடைபெறும் இனப்படுகொலைகளை நிறுத்துவதற்கு உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

உலகம் எங்கும் பரந்துபட்டு வாழுகின்ற தமிழ் மக்களின் மன ஆதங்கத்தைக் கருத்தில் எடுத்து அப்பாவிகள் கொல்லப்படுவதைத் தடுத்துநிறுத்துமாறு இலங்கை அரசை இந்தியா கோரவேண்டும்.

இதற்கு அனுசரணையாக ஏனைய அரசியல் கட்சிகளுடன் கலந்துபேசி இலங்கைக்கு நாடாளுமன்றத் தூதுக்குழுஒன்றை அனுப்பி அந்தக் குழுமூலம், அப்பாவித் தமிழர்களின் உயிர்களைப் பாதுகாப்பதற்கான வழிமுறைகளை இலங்கை நிர்வாக பீடத்துடன் பேசி, அதற்கான ஏற்பாடுகளைச் செய்யவேண்டும்.''-

என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய மாநாடு ஞாயிறன்று

கொழும்பு, நவ. 16

ஐக்கிய தேசியக் கட்சியின் 61 ஆவது வருடாந்த தேசிய மாநாடு எதிர்வரும் 19 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை கட்சியின் தலைமையகமான ஸ்ரீகொத்தாவில் நடைபெறவுள்ளது.

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் காலை 10 மணியளவில் நடைபெறும் இம்மாநாட்டில் கட்சியின் உறுப் பினர்கள், ஆதரவாளர்கள் மற்றும் முக்கியஸ்தர்கள் உட்படப் பலர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இம்மாநாட்டில் கட்சியின் சீர்திருத்தம் தொடர்பாக கட்சியின் தேசிய அமைப்பாளர் எஸ்.பி. திஸநாயக்கவால் முன்வைக்கப்பட்ட யோசனைகள் உட்படப் பல விடயங்கள் கவனத்தில் எடுக்கப்படும் என கட்சி வட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்தன. (ஐ)

## கூட்டமைப்பின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திருந்தனர்.

இவர்களில் ஒரு தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர்கள் கொழும்பு செல்வதற்காக நேற்றுமாலை பலாலி சென்றனர் என்றும்-

வானிலை சீராக இல்லாத காரணத்தால் விமானசேவை இடம்பெறாததால் அவர்கள் நகருக்கு திரும்பினர் என்றும் - தெரிவிக்கப்பட்டது.

இன்று காலை இவர்கள் கொழும்பு செல்ல ஏற்பாடுகள் செய்யப்படுவதாகக் கூறப்பட்டது. (அ-1)

## சக்தி ரி.வியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு அரசியல் பிரமுகர்களின் செவ்விகளை மும்மொழிகளிலும் பெற்று தொகுத்து வழங்கும் 'மின்னல்' மற்றும் 'எரிமலை' நிகழ்ச்சிகள் ஊடாக பிரபலம் பெற்றிருப்பவர் ஸ்ரீரங்கா.

சக்தி ரி.வியில் நீண்டகாலமாக வாராந்தம் ஒளிபரப்பாகிவரும் 'மின்னல்' நிகழ்ச்சியின் 250ஆவது வார நிகழ்வு கடந்த வாரம் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கதாகும். (த)

## அடுத்த இரு ஆண்டுகளில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தப் பொது புரிந்துணர்வு ஒப்பந்தம் நிறைவேற்றப்பட வேண்டுமானால் அரசியல் வாதிகள் என்ற ரீதியில் எமது தரப்பில் சில வேலைகளைச் செய்யவேண்டும். அதேபோல் பொதுமக்கள் உட்பட பல்வேறு தரப்பினரிடமிருந்து பெருமளவு பங்களிப்பு அவசியமாகும். இதன் மூலம் இந்நாட்டை மீண்டும் கட்டியெழுப்புவதே எமது நோக்கமாகும்.

வடக்கு, கிழக்கு பிரச்சினைக்கு புலிகள் அமைப்பு தீர்வு தொடர்பான ஆலோசனைகளை முன்வைத்துள்ளது. இலங்கை அரசு இதுபோன்ற ஆலோசனைகளை முன்வைக்கவில்லை என்று சர்வதேசசமூகம் தெரிவிக்கின்றது. இந்த நிலையின் கீழ் இருதரப்பும் இது தொடர்பாக பொதுவான ஒரு இணக்கப்பாட்டுக்கு வந்து ஆலோசனைகளை முன் வைக்கவேண்டியுள்ளது. வடக்கு - கிழக்கு பிரச்சினைக்கு சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் ஏற்றுக்கொள்ளும் ஜனநாயக அரசியல் தீர்வொன்றை வழங்கவேண்டுமென இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம்மூலம் இரண்டு பிரதான கட்சிகளும் இணங்கியுள்ளன.

பிரதான இருகட்சிகளும் பொது இணக்கப்பாட்டுக்கு வந்ததன் மூலம் சகல பிரச்சினைகளுக்கும் தீர்வினைக் கண்டுவிட முடியாது. இதற்காக சமூகத்தின் சகல தரப்பினரும் ஒன்றிணைய வேண்டும். இப்படிச் செய்யாவிட்டால் ஜனாதிபதியும் எதிர்க்கட்சித் தலைவரும் நாட்டை காட்டிக்கொடுக்கின்றார்கள் என்ற குற்றச்சாட்டு எழலாம். அல்லது சிங்களக்கட்சிகள் அனைத்தும் கூட்டுச்சேர்ந்து தமிழ் மக்களை அடக்கி ஒடுக்கப் பார்க்கின்றார்கள் எனக் குற்றச் சாட்டுவதற்கும் இடமுண்டு.

இந்த சாதாரண முயற்சி தொடர்பாக மக்களுக்கு நன் றாக தெளிவாக்கி அவர்களது ஆதரவைப் பெற்றுக் கொண்டால் மேற்சொன்ன இரு குற்றச்சாட்டுகளும் செயலிழந்து போகச்செய்யும் பலம் எம்மிடம் இருக்கின்றது.

- இவ்வாறு ரணில் தெரிவித்தார். (ஐ)

## வரவு - செலவு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிதி அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்துள்ளார்.

2007ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்டத்தின் மீதான விவாதம் நடைபெறும் தினங்கள் வழமையைவிட அரைவாசியாக குறைக்கப்பட்டுள்ளன. வரவு - செலவுத் திட்ட விவாதம் 17ஆம் திகதி ஆரம்பமாகி டிசம்பர் 6ஆம் திகதிவரை நடைபெறும். டிசம்பர் 6ஆம் திகதி வரவு - செலவுத் திட்டம் மீதான வாக்கெடுப்பு நடைபெறும்.

இதேவேளை, ஐக்கிய தேசியக்கட்சி இந்த வரவு - செலவுத் திட்டத்தை எதிர்க்கப் போவதில்லை என ஏற்கனவே அறிவித்திருந்தது தெரிந்ததே.

இன்றைய நாடாளுமன்ற அமர்வுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்கள் வருகைதர மாட்டார்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது. நேற்று நடைபெற்ற மாமனிதர் ரவிராஜின் இறுதிக் கிரியைகளில் கலந்துகொள்வதற்காக கூட்டமைப்பு எம்.பிக்கள் பலர் யாழ்ப்பாணத்துக்கு சென்றிருப்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## கிழக்கில் இரு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்றும் தெரிவிக்கப்பட்டது.

வாகரை மற்றும் கதிரவெளிப் பிரதேசங்களை நோக்கி படையினரும் பதில் தாக்குதல்களை மேற்கொண்டனர். வாழைச்சேனை காகித ஆலை இராணுவ முகாமிலிருந்து வாகரைப் பிரதேசத்தை நோக்கி நேற்றுமுன்தினம் இரவும் படையினரால் ஆட்லறி ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

இந்தத் தாக்குதல்களின் அதிர்வுகளை ஓட்டமாவடி, வாழைச்சேனை மற்றும் மீராவோடைப் பிரதேசங்களில் தினமும் உணரக் கூடியதாக உள்ளதாக இப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த இரண்டு வாரங்களுக்கும் மேலாக இப்பகுதிகளில் இரு தரப்பி னரும் எறிகணைத் தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றனர். வாகரைப் பிரதேசத்தை நோக்கி மட்டுப்படுத்தப்பட்ட இராணுவ நடவடிக்கை யொன்றை மேற்கொள்ளும் நோக்கத்துடன் படையினரும், அதனைத் தடுக்கும் வகையில் புலிகளும் பரஸ்பரம் எறிகணைத் தாக்குதல்களை மேற்கொண்டுவருவதாகத் தெரிவிக் கப்படுகின்றது. (ஐ)

## ரவிராஜின் உடல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இறுதிச் சடங்கின் போதும், பின்னர் இறுதி ஊர்வலத்திலும் கலந்து கொண்டவர்கள் துக்கம் தாளாமல் கதறி அழுதனர். ஆத்திரம் மேலிட்டவர்களாகக் காணப்பட்டனர்.

யாழ். குடாநாட்டின் பல பகுதிகளிலும் இருந்து இறுதிச் சடங்கில் கலந்துகொள்ள வந்தவர்களால் சாவகச்சேரிப் பிரதேசம் நிறைந்து காணப்பட்டது. டச்சு வீதியில் உள்ள மாமனிதர் ரவிராஜின் இல்லத்திலும், அயலிலும் மக்கள் வெள்ளமெனத் திரண்டிருந்தனர்.

தென்மராட்சி மற்றும் குடாநாட்டின் ஏனைய பகுதிகளிலிருந்து இறுதி அஞ்சலி செலுத்துவதற்குச் சென்ற மக்கள் தடங்கலின்றிப் பயணம் செய்யக்கூடியதாக இருந்தமையால் அடிக்கடி பெய்த மழையின் மத்தியிலும் மக்கள் கூட்டம் வழிந்தது.

அந்தப் பிரதேசமெங்கும் தோரணங்களும், கறுப்புக்கொடிகளும் நிறைந்து காணப்பட்டன. ஆழ்ந்த சோகமும், கனத்த மௌனமும் அங்கு உணரப்பட்டது.

மாமனிதர் ரவிராஜின் இல்லத்தில் சமயக் கிரியைகள் நேற்றுக் காலையிலேயே ஆரம்பமாகிவிட்டன. கிரியைகள் நடைபெற்ற சமயத் திலும் பெருந்திரளானவர்கள் தங்கள் இறுதி அஞ்சலியைச் செலுத்துவதற்காக வந்து போய்க் கொண்டிருந்தனர்.

ஒரு கட்டத்தில் சனத்திரள் அதிகரித்து மக்களைக்கட்டுப்படுத்தமுடியாத நிலைமையும் ஏற்பட்டது. சன நெரிசலைத் தவிர்த்து அஞ்சலி நிகழ்வுகளை ஒழுங்கமைப்பதில் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் படாதபாடு படவேண்டியிருந்தது.

நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை. சோ. சேனாதிராஜா, எம்.கே. சிவாஜிலிங்கம் ஆகியோர் அலை மோதிய மக்களைக் கட்டுப்படுத்தி ஒழுங்குபடுத்தினர்.

மதச்சடங்குகள்கிரியைகள்முடிவடைந்து இரங்கல் கூட்டம் இடம்பெற்றது. நாடாளுமன்ற உறுப்பினர் கி. சிவநேசன் கூட்டத்துக்குத் தலைமை வகித்தார்.

அரசஅதிபர், சட்டத்தரணிகள், நீதிவான்கள், மதத் தலைவர்கள், மனித நேய அமைப்புகளின் பிரதிநிதிகள் அடங்கலாகப் பெரும் எண்ணிக்கையான பிரமுகர்கள் இரங்கல் கூட்டத்தில் திரண்டிருந்தனர்.

யாழ். அரச அதிபர் கே. கணேஷ், இந்து மதகுரு பாலகுமாரக் குருக்கள், தென்னிந்திய திருச்சபையின் சாவகச்சேரி அத்தியட்சாதீன மதகுரு போதகர் வசந்தகுமார், ரவிராஜ் கல்வி பயின்ற டிறிபேர்க் கல்லூரியின் முன்னாள் அதிபர் மு. நாகேந்திரராஜா, தமிழரசுக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களான துரைரட்ணசிங்கம், பத்மினி சிதம்பரநாதன், செல்வம் அடைக்கலநாதன், சுரேஷ் பிரேமச்சந்திரன், மாவை சேனாதிராஜா, செ. கஜேந்திரன் மற்றும் சட்டத்தரணிகள் சார்பில் த.வேலாயுதம் ஆகியோரும் இரங்கல் உரை நிகழ்த்தினர்.

மகஸின் சிறைச் சாலைக் கைதிகள் வரைந்து அனுப்பிய கண்ணீர்க் கவிதையும் அங்கு படிக்கப்பட்டது.

அதன் பின்னர் இறுதி யாத்திரை ஆரம்பமாகியது.

மலர்களால் வடிவமைக்கப்பட்ட பூந்தண்டிகையில் பேழை வைக்கப்பட்டது. தமிழரசுக் கட்சியின் ஆதரவாளர்களும், உறவினர்களும் அதனை மயானம் வரை சுமந்து வந்தனர்.

சுமார் ஒரு மைல் நீளத்துக்கு இறுதி யாத்திரையில் மக்கள் திரண்டு சென்றனர்.

சரியாக 12.45 மணியளவில் கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு உடல் கொண்டு வரப்பட்டது.

1.30 மணிக்கு சிதைக்குத் தீ மூட்டப்பட்டது. உறவினர்களும், நண்பர்களும், ஆதரவாளர்களும், பொது மக்களும் கதறி அழ மாமனிதரின் உடல் தீயுடன் சங்கமித்தது. (ஐ-203-31-86)

## வடக்கு - கிழக்கில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வகையில் மக்கள் அன்றாட அலுவல்களைத் தவிர்த்து துக்கம் அனுஷ்டித்தனர்.

யாழ். குடாநாடு முழுவதுமாக சோகத்தில் ஆழ்ந்து காணப்பட்டது. வர்த்தக நிலையங்கள் மூடியிருந்தன. பாடசாலைகள், அரச அலுவலகங்கள் இயங்கவில்லை. போக்குவரத்துகளும் இடம்பெறவில்லை.

ரவிராஜின் இறுதிச் சடங்கு நடைபெற்ற தென்மராட்சிப் பிரதேசம் எங்கும் கறுப்பு, வெள்ளைக்கொடிகள் காணப்பட்டன.

ஏற்கனவே பணி முடக்கத்தால் செயலிழந்து போயிருக்கும் வவுனியா மாவட்டத்திலும் நேற்று பூரண ஹர்த்தால் இடம்பெற்றது. வவுனியா நகரம் செயலிழந்து போய் காணப்பட்டது.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள வன்னிப் பிரதேசங்களிலும் நேற்றைய நாள் துக்கதினமாக அனுஷ்டிக்கப்பட்டது.

கிழக்கில் திருமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய பிரதேசங்களிலும் முழு அளவில் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டதாக அறிவிக்கப் படுகிறது. மட்டு. - அம்பாறை மாவட்டங்களில் நேற்று இரண்டாவது நாளாகவும் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

நாடாளுமன்ற உறுப்பினர் ரவிராஜின் இறுதிக் கிரியைகள் நேற்று நடைபெற்றதை முன்னிட்டு அன்னாருக்கு அஞ்சலி செலுத்தும் வகையிலேயே மட்டு. - அம்பாறை மாவட்ட தமிழ் - முஸ்லிம் பகுதிகளில் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

ஹர்த்தால் நடவடிக்கை காரணமாக இப்பிரதேசங்களில் மக்களின் இயல்பு வாழ்க்கை முழுமையாகப் பாதிக்கப்பட்டிருந்தது. அரசநிர்வாக நடவடிக்கைகள் யாவும் முற்றாக ஸ்தம்பிதம் அடைந்திருந்தன.

நேற்று புதன்கிழமை பொது மக்கள் தினமாக இருந்த போதிலும், அரச அலுவலகங்கள் திறக்கப்படவில்லை. வங்கிகளும் மூடப்பட்டிருந்தன. உள்ளூர் மற்றும் தூர இடங்களுக்கான போக்குவரத்துச் சேவைகளும் தடைப்பட்டிருந்தன.

பாதுகாப்புப் படையினர் வழமையான பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தனர். (ஐ -86-31-115-155-15-111-88-79)

324, Palaly Road, Jaffna.
GCE O/L-2007 மாணவருக்கான ICT
Unit-5 : Programming Concepts
Visual Basic
MCS 18-11-2006இற்கு முன் பதிவோருக்கு 50% off
Supported By UNDP/URRP

A2Z COM.COM இன்
விசேட விலைக்கழிவு
தரம் வாய்ந்த தாய்வான் தயாரிப்பு
Flash memory Sticks..(USB)
கையடக்கமான புதிய அழகிய வடிவமைப்பு
ஒரு வருட உத்தரவாதத்துடன்
With Password protection
எங்குமில்லாத விலையில்
256 MB - 1550/=
512 MB - 2550/=
மொத்தமாகக் கொள்வனவு செய்பவர்களுக்கு சலுகை விலைகள்..
@ 192, Navalar Road, Jaffna
(ஈழநாடு அலுவலகம் முன்பாக, பெருமாள் கோவிலடி)
கையிருப்பு உள்ளவரை மட்டுமே !

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) [illegible] வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 16.11.2006 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org